4766/69

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JAN 1960

தமிழ் வாழ்க!

துணர் ௩௫. மலர் ௯

தமிழ்ப் பொழில்

விகாரி - மார்கழி

1959

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம், B. A., B. L., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்; பொழிற்றொண்டர்.

2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.

3. பேராசிரியர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

4. சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

5. வித்துவான், க. வெள்ளைவாரணனார்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

6. திரு. சி. வேதாசலம், B. A., B. L.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

7. திரு. வித்துவான் ச. பாலசுந்தரம்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

உள்ளுறை

துணர் கூரு — மலர் சு

		பக்கம்
1.	நாவலர் மறைவு பொழிற்றொண்டர்	257
2.	இரங்கற் கூட்டம் கரந்தைத் தமிழ்ச் சங்கம்	258
3.	பாரதியே எங்குற்றாய்! வித்துவான், ச. பாலசுந்தரம்	262
4.	பண்டிதர், சவரிராயர் டாக்டர், மா. இராசமாணிக்கனார்	263
5.	ஆசார்ய போகம் வித்துவான், அடிகளாசிரியர்	271
6.	தமிழில் தாவரம்: தேமா—புளிமா. கு. சீநிவாசன், M. Sc.,	275
7.	சிற்றிலக்கியம் 2: ஆற்றுப்படை மது. ச. விமலானந்தம், எம். ஏ.,	279



பேரறிஞர், நாவலர், கணக்காயர்,

ச. சோமசுந்தர பாரதியவர்கள், எம். ஏ., பி. எல்.,

தோற்றம்: 27—7—1879. **மறைவு: 14—12—1959**

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௩௫	திருவள்ளுவர் யாண்டு ௲௯௯௰ விகாரி, மார்கழி 1959—1960 டிசம்பர், ஜனவரி.	மலர் ௯

2 - JAN 1960

நாவலர் மறைவு.

பேரறிஞரும் நாவலருமாய ச. சோமசுந்தரபாரதியாரவர்கள் 14-12-59 திங்கட்கிழமை இரவு இயற்கையெய்தியமையறிந்து வருந்துகின்றோம். பாரதியாரவர்கள் கற்றோர்க்குத் தாம் வரம்பாக நின்ற தக்கபேரறிஞராவார். தம் வாழ்நாளில் தமிழ் நலங்கருதியும் தமிழர் நலங்கருதியும் குறிப்பிடத்தக்க தொண்டுகளைத் தம்முடைய எழுத்தாலும் பேச்சாலும் இயற்றியவர். தமிழ் மொழியில் பேசுவதும் தெரியாதென்று இறுமாந்து கூறும் நாளில் தமிழில் கடலென முழங்கி அறிவூட்டிய பெருமை நாவலர்க்குண்டு. தமிழ்த்துறையில் அவர் தொண்டு கைம்மாறு கருதாத இயல்பினது. எவ்வகையான பயனையும் எதிர்பாராது தமிழிலக்கண இலக்கிய ஆய்வில் இறங்கினார். அவருடைய ஆர்வமெல்லாம் உண்மைகாண வேண்டும்; தமிழும் தமிழரும் தமிழ் மாநிலத்திலாவது நன்னிலையடைய வேண்டுமென்பதாகும்.

பாரதியாரவர்கள் புலமைத்துறையில் சிறந்து விளங்கியதுபோலவே வாழ்வுத்துறையிலும் வள்ளுவர் கூறியதுபோல வாழ்வாங்குப் புகழ்பட வாழ்ந்த பெருந்தகையாவர். அவர் தம்முடைய வாழ்வுக்குப் புலமையை முதலாகக்கொள்ளவில்லை. புலமையை விலைகூறியறியாப் பெருந்தகையாக வாழ்ந்தார். அருங்கலை விநோதனெனச் சீயகங்கன் புகழப்படுவதுபோலத் தொல்லைப் பனுவல்களில் தோய்ந்து பயில்வதையும் மற்றவருக்குரைப்பதையும் தமது பொழுதுபோக்காகக் கொண்டவர். இதன் பயனாக எவருடைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பலகருத்துக்களை நன்கெடுத்துக் கூறினார். நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தொடும் சங்கத் தலைவர் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களுடனும் நெருங்கிய தொடர்புடையவர். அவருடைய புலமையும் புதுமையும் ஒருங்கே விளங்கும் உரைகள் பலவற்றை நிகழ்த்த நம் சங்க முன்றம் தாராளமாக இடந்தந்தது. நம் பொழிலும் பல கட்டுரைகள் வெளிவர இடமாயிற்று. பல ஆண்டு விழாக்களில் விரிவுரை நிகழ்த்தினர். நம் சங்க ஒன்பதாவது ஆண்டு விழாத் தலைவராகத் தலைமை ஏற்று உரைவழங்கிச் சிறப்பித்துள்ளார். பெருஞ்சிறப்பிற்குரிய பாரதியவர்கள் மறைந்தமை குறித்து வருந்துகின்றோம். நம் வருத்தத்தை அவர் குடும்பத்தினர்க்கும் தமிழ் மக்கட்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பொழிற்றொண்டர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

இரங்கற் கூட்டம்.

தமிழ்ப் பேரறிஞரும், நாவலரும், கணக்காயரும், வழக்குரைஞருமாகத் திகழ்ந்த பசுமலை ச. சோமசுந்தர பாரதியாரவர்கள் (14—12—59) திங்கட்கிழமை இரவு இயற்கை யெய்தியமையறிந்து கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் 16—12—59 புதன்கிழமை மாலை ஓரிரங்கற் கூட்டம் சங்கத் தலைவர், ச. சுயம்பிரகாசமவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. துண்டறிக்கைமூலம் தஞ்சை நகரெங்கும் அறிவிப்புச் செய்யப்பட்டது. நகரத்திலிருந்தும், கரந்தையிலிருந்தும் சங்க அன்பர்களும், தமிழன்பர்களும், தமிழாசிரியர் பெருமக்களும் சங்கத் தமிழ்ப்பெருமன்றத்தில் கூடியிருந்தனர். சங்கக் கல்வி நிலைய மாணவர்களும் ஆசிரியர்களும் குழுமியிருந்தனர். மறைந்த நாவலர் பெருமானின் பண்பு நலங்களையும் தமிழ்த் தொண்டினையும் பல அன்பர்கள் பாராட்டிப் பேசினர்.

சங்கத் தலைவர் முன்னுரையாகப் பின் வரும் கருத்துக்களை மொழிந்தார். நம் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தொடும் தமிழவேள், உமாமகேசுவரம் பிள்ளையவர்களுடனும் தமிழ்த் தொண்டில் உற்ற துணைவராயிருந்து தொண்டாற்றினர். சங்க வெளியீடான "தமிழ்ப் பொழிலில்" அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வந்துள்ளன. சங்கத்தின் ஆண்டு விழாக்களில் சிறப்புச் சொற்பொழிவாளராகப் பல ஆண்டுகள் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியுள்ளார். சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டு விழாவிற்குத் தலைவராகவும் இருந்துள்ளார். சங்கத் தொடர்பாக மேற்குறிப்பிட்ட தமிழ்த் தொண்டாற்றியதோடு, பிற சங்கங்கள், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் போன்றவற்ரேடும் தொடர்புகொண்டு தமிழ்த் தொண்டாற்றினர். இவ்வாறு அவர் வாழ்நாளில் செய்த புலமைத் தொண்டுகளை எல்லோரும் அறிந்திருக்க முடியாது. இளம் மாணவரும் மற்ற யாவருமுணர விரித்துரைப்பது பொருத்தமேயாகும். தமிழ்க் கல்வியை ஊதியம் கருதிப் பயிலாமல் தமிழன் தன் தாய்மொழியை அறிந்துகொள்ளவேண்டும் என்னும் அவாவுடன் பயின்று புலவர்க்கும் புலவராய் விளங்கினர். சட்டக் கலையில் தாம் படித்தறிந்த புலமைத் திறத்தை தமிழாராய்ச்சியில் நன்கு பயன்படுத்தினர். அவருடைய உரைகளிலும், கட்டுரைகளிலும் இந்நுணுக்கங்களைப் பலவிடங்களில் காணலாம். மிக்க உறுதி படைத்தவர். தனக்குச் சரியென்று பட்டதை யாரிடத்திலும் அஞ்சாது எடுத்துரைக்கும் திறமுடையவர். இதற்குத் தாம் கண்ட ஒரு நிகழ்ச்சியைக் கூறி விளக்கினர்.

அடுத்துக் காலம் சென்ற நாவலர், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களின் இளவலும், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரும், நல்ல பல

தமிழ் நூல்கட்கு ஆசிரியரும் ஆகிய திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார் அவர்கள் மறைந்த பேரறிஞரைப்பற்றிப் பேசிய கருத்துக்கள் வருமாறு :—

"தமிழ்நாடு ஒரு பெரும்புலவரை இழந்து வருந்துகின்றது. நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கில்லை. பல சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கின்றேன். பா. வே. மாணிக்க நாயக்கர் தலைமையில் திருச்சி, செயின்ட் சோசப் கல்லூரி மாணவர் கழகத்தில் சொற்பொழிவாற்றினர். நாயக்கர் பாரதியின் பேச்சைப் பாராட்டியதை யானறிவேன். அப்போதெல்லாம் வடமொழி கலந்து உரையாற்றியும், எழுதியும் அறிஞர்கள் வந்தனர். பாரதியின் பேச்சிலும் வடமொழிக் கலப்பிருந்தது. நாயக்கர் நல்ல தமிழில் பேசவேண்டும் என்றார். பிறகு தன்னுடைய உரையில் ஒல்லுமளவு தமிழ் மொழியிலேயே உரை நிகழ்த்தினர். யாரிடத்தும் உண்மைகளிருப்பின் அதனை ஏற்றுக்கொள்வதில் பாரதியார் பின்வாங்கியதில்லை" என்றார்.

அடுத்துத் திருவையாற்று அரசர் கல்லூரிப் பேராசிரியர், திரு. வி. அ. அரங்கசாமியவர்கள் உரையாற்றினர். தமிழ் மொழியின்மீது அளவற்ற பற்றுடையவர். நம் நாட்டிற்குத் தமிழ்நாடெனப் பெயரிட்டழைக்கவேண்டுமென விரும்பினர். பிறமொழி, கலை ஆயவற்றைப் பழுதறப் பயின்று அதனைத் தமிழ் மொழி வளத்திற்குப் பயன்படுத்தி வாழவேண்டுமென்பதற்குப் பாரதியார் சிறந்த எடுத்துக்காட்டாய் இலங்கினர். இம்முறையில் தமிழ்ப் புலவராயினர் வாழ்ந்தால் தமிழ் வளம் பெறும், தமிழ்நாடு சிறக்கும்.

பின்னர்ப் புலவர் ஏகாம்பரநாதர் பேசியதன் சுருக்கம் :—

அவருடைய மாணவருள் தாமும் ஒருவரென்று கூறினர். வழக்குரைஞராக இருந்தபோது நல்ல பெயரும் புகழும் படைத்தவராக விளங்கினர். ஆங்கிலத்தில் அவருக்கு நல்ல புலமையிருந்தது. நினைத்தவற்றையெல்லாம் செயலில் செய்து முடித்தார். அவர் மேற்கொண்ட துறைகளிலெல்லாம் நல்ல வல்லமை பெற்றிருந்தார். வள்ளுவர் வாழ்வாங்கு வாழுதல் என்று கூறுவதுபோல வாழ்வாங்கு வாழ்ந்த பெருமகனைக் கூறலாம். பலதுறைப் புலவர் புகழப் "புலவர் குழுத் தலைவராகத் திகழ்ந்தார். அவர் வாழ்க்கை மிகத் தூய்மையானதாகும்." மேனாட்டில் சான்சன் என்னும் இலக்கிய வல்லுநர் போலத் தமிழ் நாட்டில்தமிழ் மொழிக்கு பாரதியார் விளங்கினர்.

தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர், திரு. சடகோபராமானுசம் பிள்ளையவர்கள் பேசியதன் சுருக்கம் :—

பாரதியார் அவர்கள் கவிதை பாடும் நெறியில் மாறுபட்டவரும் போற்றும் பெருமையுடையவராக விளங்கினர். அவர் தமிழ் நாட்டுக்கு மொழித்துறையில் செய்த தொண்டுகள் பலவாகும். வெள்ளி விழா நாளில் சங்கத் தலைவருக்குத் தமிழவேள் என்ற பட்டத்தை வழங்கியபோது அவர் ஆற்றிய உரை மிகவும் சிறப்பாக இருந்தது.

இலக்கியத் தொடர்பான ஒரு வழக்கில் பண்டிதமணியவர்கள் சார்பில் வழக்குரைஞராகவிருந்தார். "மாயோன் மேய காடுறை யுலகமும்" முதலாய பல தொல்காப்பிய நூற்பாக்கட்கு அவர் கூறிய உரை அறிஞர்களின் பாராட்டுதலுக்குரியதாகும். உணவு—உடை முதலி யவற்றில் மறைமலையடிகள்போல வரையறுத்த வாழ்வுடையவராக விருந்தார். அவருடைய உரைநடை மிகவும் மிடுக்கானது. அவ ருடைய பேச்சு எளிமையானது.

தூய பேதுரு உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு. தி. பால சுப்பிரமணியம் பேசியதன் சுருக்கம் :—

இறந்தவரை நினைத்து இரங்குவது அவருடைய தொண்டைக் கருதியேயாகும். அதனை ஈடுசெய்ய முடியாதபோது துன்பம் மிகுகின்றது. நல்ல நாட்டுப் பற்றுளர். வ. உ. சிதம்பரம்பிள்ளையுடன் தொடர்புடையவர். நல்ல துணிவுடையவர்.

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. இராமமூர்த்தி பேசிய கருத்து :—

நன்முறையில்வாழ விரும்புபவர் யாவரும் தம் குறிக்கோளுக்காக ஒருவரைக்கொள்ளுவர். அம்முறையில் மறைந்த நாவலர் பாரதியார் அவர்கள் இளமைக்காலம் முதல் என்னுள்ளங்கவர் அறிஞராக விளங்கினர். தன்னுள்ளத்தில் பட்ட கருத்தை ஒளிவு மறைவின்றி வெட்டொன்று துண்டிரண்டு என்ற முறையில் பேசும் பாரதியின் பேச்சு என்னுள்ளத்தை மிகவும் கவர்ந்தது. தமிழ்த் துறைக்குத் தம்முடைய உண்மையான பற்றுக் காரணமாகத் திரும்பி வந்து பெரும்புலவரானவர். நாட்டுப்பற்றுடையவர். காங்கிரசில் இருந்தவர். மொழிப்போர் காரணமாக அதனின்றும் விலகியவர்.

வீரராகவ உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. இளங்கோ பேசியதன் சுருக்கம் :—

தமிழரையோ, தமிழையோ, இழித்துப் பிறர்பேசச் சிறிதும் பொறுக்காதவர். இராமாயண — பாரத காவியங்களில் மக்கள் நம்பிக்கைக்கு மாறுகக் கருத்துக்களை வழங்கி நிறுவியவர். தருமன் சால்பில்லாதவனென வாதிடுவார். நல்ல ஆய்வுரைகளை வழங்கியவர். அவரைப் பின்பற்றிச் சென்றால் இக்காலத்திற்கு வேண்டிய நல்ல உணர்ச்சி பெறலாம். மொழிப்பற்றையும் பெறலாம்.

திரு. S. S. மணியவர்கள் பேசிய கருத்து :—

வயது முதிர்ந்த அறிஞர்கட்கும், பெருமக்கட்கும், இளைஞர் நல்ல மதிப்புக் கொடுக்கவேண்டும். நாமவர்களின் அறிவுரைகளை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இழந்த இழப்பை ஈடு செய்ய நம்மனத்தைப் பண்படுத்திக்கொள்ள வேண்டும்.

கல்லூரி மாணவர் ஞானப்பிரகாசம் பேசிய கருத்து :—

மறைந்த நாவலர் பாரதி நமக்கு விட்டுச்சென்றது தமிழ் நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் தொண்டு செய்வதென்பதேயாகும். இவ்வளவிலில்லாமல் தன்னம்பிக்கையோடு வாழவேண்டும் என்னும் எண்ணத்தையும் நமக்களித்துள்ளார். தமிழுக்கு மேலும் மேலும் தொண்டு செய்யவேண்டுமென்னும் எண்ணத்துடன் வாழ்ந்தார். உலகிற்குள்ள பெருமை நிலையாமையாகும். நிலையாத வாழ்வில் நிலைத்த புகழ்பட நல்வழியில் நடப்பது நம்மனோர் கடமையாகும்.

P. S. வேங்கடகிருட்டின பிள்ளையவர்கள் பேசியது :—

தமிழ் நாட்டில் மேடை ஏறிப் பேசுதற்கேற்றுற்போன்ற தோற்றமும் பொலிவுமுடையவர்களில் மறைந்த பாரதி சிறந்தவர். துணிவு பலரிடமிருக்கலாம். அது மட்டும் போதாது, அதற்குத்தக்க புலமையும் வேண்டும். பாரதியாரிடம் துணிவுமிருந்தது. புலமையுமிருந்தது. பண்டைய நூற்களில் திளைத்ததுபோலவே, தேசியக் கவிஞர் பாரதி பாடலிலும் திளைத்தார். மற்றவரும் திளைக்கும் வண்ணம் எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர். நல்ல தேசியத் தொண்டர். அவருடைய பண்புகள் நமக்கு நல்வழி காட்டுமாக.

திரு. புலவர். பாலசுந்தரம், திரு. பண்டித. சித. நாராயணசாமி, திரு. புலவர். இரா. சிங்கப்பெருமாள் ஆகியவர் எழுதிய கையறு நிலைப்பாக்களை கல்லூரித் துணைத் தலைவர் திரு. ந. இராமநாதன் படித்தார். சங்கத் தலைவர் முடிவுரையாகப் பின்வரும் முடிபினை அறிவித்தார்.

நாவலரும் கணக்காயரும் பேரறிஞரும் ஆகித் திகழ்ந்த பசுமலை ச. சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்., அவர்கள் 14–12–59 திங்கள் இரவு இயற்கை எய்தியமை யறிந்து தமிழுலகம் ஆழ்ந்த துயரமடைந்துள்ளது.

சங்கத்திற்கும் தமிழ்ப் பொழிலுக்கும் நாவலர் பாரதியவர்களின் தொடர்பு பன்னெடுங்காலமாக மிக்கிருந்தமை தமிழுலகம் நன்கறியும். அவர் தம் மறைவு தமிழகத்திற்கும் தமிழ்மொழிக்கும் ஈடுசெய்ய வியலாத பேரிழப்பாகும். நாவலரைப் பிரிந்து வருந்தும் குடும்பத்தாருக்கும் நண்பர்கட்கும் தமிழ் மக்கட்கும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தனது ஆழ்ந்த துயரைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

எல்லோரும் எழுந்து நின்று மறைந்த நாவலர்க்கு வணக்கம் கூறினர். இத்துடன் கூட்டம் முடிந்தது.

கையறு நிலை.

தூய தமிழ்ச்சோம சுந்தர பாரதியே!
வாயுரைக்கும் நல்ல வழக்கறிஞ! — நீ யிதுகால்
என்புரிந்தாய், எங்ககன்றுய் யாம்வருந்தல் நின்னளிக்கு
மன்பொருந்து மோஉரைத்தி மன்.

—பண்டித, சித. நாராயணசாமி.

பாரதியே எங்குற்றாய்!

ச. பாலசுந்தரம், புலவர் கல்லூரி.

1. பேரறிஞர் எனக்கொண்டு பிறபுரிவார்
புகழ்பெறுவார் பிழைப்பார் அஞ்சப்
பேரறிஞர் ஆய்த்திகழ்ந்த பீடுதமிழ்
நாவல!நற் பேரா சானென்
றூரறிய உலகுவப்ப உரைமிகுத்த
ஒண்சுடரே! ஒட்ப மிக்க
பாரதியே! எங்குற்றாய்; பண்பட்ட
தமிழ் மகனே! பாவல்லோயே!

2. கொடுத்துயர்ந்த செந்தமிழின் கோளுணர்ந்து
குணம்பெருக்கக் குறையா வீரம்
மடுத்தெழுந்த தமிழேறே; மறவர்குல
மாவீரா! மதிமாண் பாலே
தொடுத்தெழுந்த கைதவரைத் தோல்விபெறச்
செய்துதமிழ்த் தூய்மை காக்க
அடுத்தடுத்துப் போர்புரிந்த அறிஞர்தமக்
கருந்தலைவா! அந்தோ! அந்தோ!

3. நக்கீரர் கபிலரையுன் நாவுரையால்
கண்டோமிந் நாட்டில் வந்து
புக்கோரின் புரையுரையைப் பல்புகழ்தொல்
காப்பியனூல் புகுந்து ணர்ந்து
தக்காங்குச் செய்யுரையால் தமிழ்மானம்
வாழ்வுகலைத் தன்மை கண்டோம்
மிக்காரும் போற்றபல மெய்யுரைகள்
ஆய்ந்தளித்த விறலே! அந்தோ!

4. மதியழகார் மதியழகன் மாவீரன்
மறத்தமிழன் வணங்காச் சொல்லன்
சதிபுரிவார் சதிக்கெல்லாம் சதியான
தமிழ்மறவன் தக்கோன் நீயென்
றெதுவரினும் இயம்புகவென் றெந்தமிழ
வேள்விரும்ப எவருங் காணப்
புதுமைகமழ் ஆய்வுரைகள் பொழிந்துதமிழ்ப்
பொழில்வளர்த்த புலவா! அந்தோ!

5. ஆய்வறிவின் கனிபழுத்த அரசே! நல்
லமுதளித்த முகிலே! கல்வித்
தாய்மகிழ்ந்த மகவே! செந் தமிழ்வளர்த்த
பேராறே! தருக்கி வந்தோர்
வாய்மடக்கிச் செந்தமிழ்த்தாய் வாகைகொளப்
பணிபுரிந்த வாள்வீ ரா! நீ
போய்மறைந்தாய்; அந்தோ! உன் பொன்னுளம்போல்
தமிழ்ப்பணியே புரிவோம் ஐயா!

பண்டிதர், சவரிராயர்.

பண்டிதர் சவரிராயர்*

டாக்டர் மா. இராசமாணிக்கனுர்,
துணைத் தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக்கழகம், சென்னை.

பாதிரிமார் தமிழ்த் தொண்டு

பெரும்புலவரும் சிறந்த ஆராய்ச்சியாளருமான பண்டிதர் சவரிராயர், கிறித்தவர். இவர் 1859-ஆம் ஆண்டில் பிறந்தவர்; 1923-ஆம் ஆண்டு வரையில் வாழ்ந்தவர். இவரது தமிழ்த் தொண்டைப்பற்றி அறியுமுன்பு கிறித்துவப் பெருமக்களின் தமிழ்த் தொண்டை இங்கு அறிதல் நலம் பயக்கும். ஏனெனில் அப்பெரு மக்களின் தமிழ்த் தொண்டே சவரிராயர் தமிழ்த் தொண்டிற்கு அடிப்படை என்னலாம்.

கிறித்தவ சமயத்தைத் தமிழகத்தில் பரப்ப இத்தாலி, ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய மேனுடுகளிலிருந்து வந்த பாதிரிமார்கள் தமிழுக்குப் பெருந்தொண்டு செய்துள்ளனர். அவர்கள் (1) தமிழ் உரைநடையை வளர்த்தனர்; (2) செய்யுள் நூல்களைச் செய்தனர்; (3) அகராதி நூல்களை இயற்றினர்; (4) தமிழ் நூல்களை ஆங்கிலத் திலும் பிறமொழிகளிலும் மொழிபெயர்த்தனர்; (5) செய்தித் தாள் களையும், திங்கள் இதழ்களையும் தமிழில் தோற்றுவித்தனர்; (6) தமிழ் எழுத்து, மொழி, நூல்கள் இவற்றை ஆராய்ந்து ஆராய்ச்சி நூல் களை வெளிப்படுத்தினர்.

தமிழ் உரைநடை நூல்கள்

உரைநடையில் அமைந்த முழுத் தமிழ் நூல்களை முதன் முதல் எழுதி வெளியிட்டவர் மேனுட்டுப் பாதிரிமாரேயாவர். கி. பி. 1579இல் ‘கிறித்தவ வேதோபதேசம்’ என்ற நூல் வெளியிடப்பட்டது. 1579-இல் ‘கிறித்தவ வணக்கம்’ என்னும் நூல் அச்சிடப்பட்டது. 17-ஆம்

* இது, திருச்சிராப்பள்ளி–தூய சூசையப்பர் கல்லூரியில் 9—11—’59 அன்று நடைபெற்ற **பண்டிதர் சவரிராயர் நூற்றுண்டு விழா**வில் மாநில அமைச்சர் **திரு. லூர்து அம்மாள்** அவர்கள் தலைமையிற் பேசப்பட்டது.

262-ஆம் பக்கத் தொடர்ச்சி

6. அவைமகிழத் தன்கருத்தை அஞ்சாமல்
எடுத்துரைக்கும் ஆண்மை மிக்கோய்!
நவைமிகுந்த புல்லுரையால் நற்றமிழும்
தமிழ்நாடும் நலியக் கண்டு
குவையிருந்து பாய்புலிபோல் கொடுமையெலாம்
குலைத்ததமிழ்க் கோவே! இந்தப்
புவி நிலைக்கும் வரையுனது புகழ்நிலைக்கப்
பணிபுரிவோம் புலவர் வாழ்வே!

நூற்றுண்டில் இராபர்ட்-டி-நொபிலி, ஜான். டி. பிரிட்டோ என்ற பாதிரிமார்கள் சில உரைநடை நூல்களை எழுதினர். 19-ம் நூற்றுண்டில் அச்சுப் பொறிகள் தமிழ் நாட்டிற்கு வந்தபிறகே உரை நடை நூல்கள் தமிழில் பெருகின. நாடெங்கும் பள்ளிகள் திறக்கப் பட்டன. எனவே, பலவகைப் பாட நூல்கள் தேவைப்பட்டன. சென்னைக் கல்விச் சங்கம், சென்னைப் பாட புத்தக சங்கம் என்ற சங்கங்கள், உலக சரித்திரம், இந்திய சரித்திரம், விஞ்ஞான பாட நூல்கள் முதலியவற்றை வெளிப்படுத்தின[1].

செய்யுள் நூல்கள்

வீரமாமுனிவர் 18-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் வாழ்ந்தவர்; சந்தா சாகிபின் காலத்தவர். அவர் ஏசுநாதர் வரலாற்றைத் 'தேம்பாவணி' என்ற பெயரில் ஒரு காவியமாகப் பாடினர். திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, இத்தேரி அம்மாள் அம்மானை முதலிய செய்யுள் நூல்களை இயற்றினர்.

அகராதி நூல்கள்

தமிழில் வந்த முதல் அகராதி வீரமாமுனிவர் இயற்றிய சதுர் அகராதி என்பது. பெப்ரீசியஸ் என்ற செர்மன் பாதிரியார் 1779-இல் விரிவான அகராதி ஒன்றை வெளியிட்டார். ராட்லர் என்பவர் முப்பத்தேழாயிரம் சொற்களைத் தொகுத்தார். அவருக்குப்பின் டெய்லர் என்பவர் ராட்லர் முயற்சியைத் தொடர்ந்து ஆயிரத்து நானூறு பக்கங்கள்கொண்ட பெரிய அகராதியை வெளிப்படுத்தினர். பெர்சிவல் முதலிய அமெரிக்க அறிஞர் திரட்டிய பேரகராதியை வின்ஸ்லோ என்ற அறிஞர் வெளியிட்டார். அதில் அறுபத்தேழாயிரம் சொற்கள் அடங்கியுள்ளன. காலப்போக்கில் தமிழில் வழங்கி வரும் சொற்களையும் சேர்த்துப் போப்பையர் வின்ஸ்லோவின் அகராதியை விரிவாக்கி வெளியிட விரும்பினர். அவர் இறந்துவிடவே அம்முயற்சியைச் சேண்டலர் என்ற ஆங்கில அறிஞர் மேற்கொண்டார்; சென்னை அரசாங்க ஆதரவில் அகராதியை வெளியிடத் தொடங்கினர். ஒருபகுதி வேலை முடிந்தபிறகு அகராதியை வெளியிடும் பொறுப்பையும் உரிமையையும் சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்றுக்கொண்டது. இருபத்தைந்து ஆண்டுகள் உழைப்பிற்குப் பிறகு தமிழ்ப் பேரகராதி ஏழு பிரிவுகளுடன் வெளிவந்தது. இதில் நூருயிரம் சொற்கள் காணப்படுகின்றன.[2]

மொழிபெயர்ப்பு

திருக்குறளை வீரமாமுனிவர் இலத்தீனிலும், கிரால் என்பவர் செர்மானியத்திலும், போப்பையர் ஆங்கிலத்திலும், லெமிரேசர்

---

1 மயிலை, சீனி-வேங்கடசாமி, "கிறித்தவமும் தமிழும்", பக். 24-29.

2 டாக்டர், ரா. பி. சேதுப் பிள்ளை, "கிருத்துவத் தமிழ்த் தொண்டர்" பக். 76-83

என்பவர் பிரெஞ்சு மொழியிலும் மொழிபெயர்த்து வெளியிட்டனர். இப்பெருமக்களின் தொண்டினுல் திருக்குறளின் சிறப்பு உலகமெல்லாம் பரவியுள்ளது. போப்ஐயர் நாலடியாரையும், திருவாசகத்தையும் தமிழில் மொழிபெயர்த்தார்; புறநானூற்றில் சில பாடல்களையும் புறப்பொருள் வெண்பா மாலையில் சில பகுதிகளையும் தமிழில் மொழிபெயர்த்தார்; பரிதிமாற் கலைஞர் பாடிய 'தனிப்பாசுரத்தொகை' என்னும் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். பலர் விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்த்தனர்.

செய்தித் தாள்கள்

தமிழகத்தில் கிறித்தவரே தமிழ்ச்செய்தித் தாள்களையும் முதன் முதலில் வெளியிட்டனர். அவர்கள் வெளியிட்டவற்றுள் தமிழ்ப் பத்திரிகை (1831), சுவிசேஷப் பிரபல விளக்கம் (1840), நற்போதம் (1840), பால தீபிகை (1840), சிறு பிள்ளையின் நேசத் தோழன் (1849), தினவர்த்தமானி (1856), மிஷன் பாடசாலைப் பத்திரிகை (1858), அருணோதயம் (1863), சுவிசேஷ தூதிகை (1863), சத்திய வேதக்கொடி (1882), தீர்க்கதரிசன சுப்பிர தீபிகை (1889), கிறித்தவன் (1890) என்பன குறிப்பிடத்தக்கவை[3]. இச்செய்தித் தாள்கள் தமிழ் உரை நடையை நாட்டில் பரப்பிய பெருமையை உடையவை.

ஆராய்ச்சி

திருநெல்வேலி மாவட்டத்தில் இடையன் குடியில் தங்கிச் சென்ற நூற்றுண்டில் சமயத் தொண்டு செய்துவந்த டாக்டர் கால்டுவெல் பல ஆண்டுகள் ஆராய்ந்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் அரிய ஆராய்ச்சி நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்; திருநெல்வேலி வரலாறு என்ற ஆராய்ச்சி நூலையும் ஆங்கிலத்தில் எழுதினுர். இப்பெரியார் பண்டைப் புகழ் வாய்ந்த கொற்கையில் ஆராய்ச்சி நிகழ்த்தினுர்; அந்நகரத்தை அகழ்ந்து அதன் தொன்மையை அறிய வேண்டும் என்று அரசினர்க்கு வேண்டுகோள் விடுத்தார். போப் ஐயர் தாம் ஆங்கிலத்தில் எழுதிய திருவாசகம், நாலடியார் என்னும் இரண்டு நூல்களிலும் எழுதியுள்ள ஆராய்ச்சி முன்னுரை அவரது ஆராய்ச்சி அறிவை நன்கு புலப்படுத்துவதாகும்.

ஜேகர் என்ற செருமானிய அறிஞரும், ரேயர் என்பவரும் ஆதிச்ச நல்லூர் மேட்டின் ஒரு பகுதியை அகழ்ந்து ஆராய்ந்து, நமது பழைமையையும், நாகரிகத்தையும் உலகிற்கு அறிவித்தனர். இந்திய மொழிகளில் மிகவும் பழமைவாய்ந்தது தமிழே என்பதையும், தமிழ் தெலுங்கு முதலிய தென்னுட்டு மொழிகளும், வடஇந்தியாவில் உள்ள இராஜ்மகால் முதலிய திருந்தாத மொழிகளும் ஓரினத் தனவே என்பதையும் உலகறியச்செய்த பெருமை கால்டுவெல்

---

3 மயிலை, சீனி-வேங்கடசாமி, "கிறித்தவமும் தமிழும்", பக். 62-66.

ஐயருக்கே உரியதாகும். கிறித்தவப் பாதிரிமார்கள் தமிழ் மக்களுக்காகக் கல்வி நிலையங்களையும் மருத்துவ மனைகளையும் தோற்றுவித்தனர்; வாழ்வற்ற மக்களுக்கு வாழ்வளித்தனர். இன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் பெரும்பாலான கிறித்தவர் கல்வி கற்றிருப்பதற்குக் கிறித்தவச் சபைகளின் தொண்டே சிறந்த காரணமாகும்.

இந்தியக் கிறித்தவர்

மேனாட்டுப் பாதிரிமாரைப் போலவே தமிழ்க் கிறித்தவரும் தங்கள் தாய்மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். திருநெல்வேலித் தமிழரான கிருஷ்ண பிள்ளை என்பவர் இரட்சண்ய யாத்ரீகம் என்னும் பெரிய செய்யுள் நூலைப் பாடியுள்ளார். முனிசீப் வேதநாயகம் பிள்ளை பல செய்யுட்களையும் உரை நடை நூலையும் இயற்றியுள்ளார். வேதநாயக சாத்திரிகள் பல செய்யுள் நூல்களைச் செய்துள்ளார். சற்குணம் உவின்பிரட் ஐயர் 'ஹோலிவார்' என்னும் ஆங்கில நூலைத் 'திருப்போராடல்' என்னும் பெயரில் மொழி பெயர்த்தார். நயனப்ப முதலியார் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் திருக்கோவையார் முதலிய நூல்களை முதன் முதலில் அச்சிட்டு வெளிப்படுத்தினார். தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் 'கருணாமிர்த சாகரம்' என்னும் அரிய இசைநூலை எழுதி அழியாப்புகழ் பெற்றார். இவ்வாறே தமிழ்க் கிறித்தவர் இயற்றிய செய்யுள் நூல்கள் பல; உரை நடை நூல்களும் பலவாகும்.

மேனாட்டு அறிஞர்கள்.

கிரியர்சன் என்னும் அரசியல் உயர் அலுவலாளர் இந்திய மொழிகளை ஆராய்ச்சி செய்து ஆங்கிலத்தில் பெரிய நூல் (Linguistic Survey of India) எழுதியுள்ளார். தெலுங்கு, கன்னடம். மலையாளம் முதலிய தென்னாட்டு மொழிகளுக்குரிய அகராதி நூல்களையும், இலக்கண நூல்களையும் [4] வடநாட்டு மொழிகட்குரிய அகராதி நூல்களையும் அரசாங்க உயர் அலுவலர் பலர் (மேனாட்டார்) அரிதின் ஆராய்ந்து தொகுத்து வெளியிட்டனர். அறிஞர் அலெக்சாண்டர் ரீ, லாங்ஹர்ஸ்ட் முதலிய அறிஞர் புதைபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு நம் நாகரிகப் பழைமையை வெளிப்படுத்தினர் [5] ரீ, லாங்குஹர்ஸ்ட், துப்ரெயில் முதலியோர் தமிழகக் கட்டடக் கலையை ஆராய்ந்து நூல் எழுதினர்[6]. டாக்டர் பர்னல் முதலியோர் தென் இந்திய எழுத்துக்களை ஆராய்ந்து நூல்கள் பல எழுதினர். [7] கில்பர்ட் சிலேட்டர் போன்ற அறிஞர் திராவிடர் நாகரிகத்தை நூல்கள் வாயிலாக வெளிப்படுத்தினர்[8]. ராலின்சன்

4 A. D. Camphell—A Grammar of the Telugu Language.

5 Alexander Rea—Catologue of the pre-historic Antiquities from Adichanallur and Perumbair.
Longturst—Annual Archeaological Reports, Madras.

6. Rea—Pallava Architecture.
Longturst—Pallava Architecture.
Dubreil—Dravidian Architecture.

7. Dr. Burnell—Elements of South Indian Paleography.

8. Dr. Gilbert Slater—Dravidian Element in Indian Culture.

முதலிய அறிஞர்கள் சங்க காலத்தில் தமிழகத்துக்கும் மேலை நாடுகளுக்கும் நடைபெற்ற கடல் வாணிகத்தைப் பற்றிக் கட்டுரைகளும் நூல்களும் எழுதினர்[9]. இத்தகைய ஆராய்ச்சிக் காலத்தில்தான் பண்டிதர் சவரிராயர் பிறந்து வளர்ந்தார்.

பண்டிதர் சவரிராயர்.

இப்பெரியார் நெல்லை மாவட்டத்தில் உள்ள வடக்கண்குளத்தில் 1859-ஆம் ஆண்டு சனவரித்திங்கள் 20-ஆம் நாளில் பிறந்தார். இவர் முன்னோர் மருத்துவ அறிஞராயும், தமிழ்ப் புலவர்களாயும் சிறந்திருந்தனர். இவர் தந்தையார் மருத்துவர் தேவசகாயம் என்பவர்; தாயார் ஞானப்பிரகாசி அம்மையார்.

தந்தையார் புலமையில் சிறப்புற்றிருந்தாற்போலவே மைந்தரும் சிறக்க விரும்பினர். கொப்பன்பட்டித் தமிழ்ப் புலவர் செபஸ்தியான் பிள்ளையிடம் தமிழ் பயின்றார்; தமது பதினைந்தாம் வயதில் கொல்லம் குருமடத்தில் சேர்ந்தார். அங்கு இரண்டு ஆண்டுகளில் லத்தீன் மொழியிலும், சமய சாத்திரத்திலும் தேர்ச்சிபெற்றார்; 1878-இல் தாயார் விருப்பப்படித் திருமணம் செய்துகொண்டார்.

பண்டிதர் சவரிராயர் முதலில் தூத்துக்குடி அர்ச். சவேரியார் தொடக்கப் பள்ளியில் ஆசிரியரானார். அப்பொழுது தம் இடைவிடா முயற்சியால் ஆங்கிலம் கற்றுச் சிறந்த புலமை பெற்றார். வடமொழியையும் தாமே முயன்று பயின்றார்; பின்பு உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியரானார்; பரதவம்ச விளக்கம் முதலிய நூல்களை எழுதினார். அவற்றால் இவரது பெயரும் பெருமையும் நாட்டில் பரவின.

1894-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அர்ச். சூசையப்பர் கல்லூரித் தலைவர்கள் இப்பெரியாரைத் தம் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராக அழைத்து அமர்த்தினர். இவர் சில ஆண்டுகளுள் அக்கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவரானார்; அவ்வேலையில் இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றினார்.

பொதுநலத் தொண்டு

இப்பெரியார் தூத்துக்குடியில் இருந்தபொழுதே உழவர் கழகத்தை உண்டாக்கி அவர்கள் நலத்திற்கு உழைத்தார். மதுரைத் தமிழ்ச் சங்க நலனுக்குப் பாடுபட்டார். திருச்சிராப்பள்ளி நகரவையில் இரண்டுமுறை உறுப்பினராக இருந்து பொதுநலத் தொண்டு செய்தார்; கூட்டுறவு பேங்கு ஒன்றை அமைத்தார். ஏழைமாணவர்க்குப் பொருள் உதவிசெய்தார். இங்ஙனம் தமிழ்த் தொண்டும் பொதுநலத் தொண்டும் செய்த இப்பெருமகனார் 1923-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 24-ம் நாளில் இவ்வுலக வாழ்வை நீத்தார். தமிழ்த் தொன்மை ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை நிறுவினார். அதன் சார்பில் "தமிழ்த் தொன்மை ஆராய்ச்சி" என்ற ஆங்கில

9. Rawlinson—Intercourse between India and the Western world.

இதழை வெளியிடத் தொடங்கினர். சித்தாந்த தீபிகை முதலிய அக் கால ஆங்கில இதழ்களிலும் பல கட்டுரைகள் வரைந்தார்.

தமிழ்த் தொன்மை ஆராய்ச்சி

இப் பெரியார் தம் காலத்தில் வெளிவந்த தமிழகம் பற்றிய ஆங்கில ஆராய்ச்சி நூல்களைப் படித்தார்; இந்திய வரலாற்று நூல்களைப் படித்தார்; தமிழின் பழைமையை உள்ளவாறு எடுத்துக் கூறிய நூல்களையும் படித்தார்; தமிழில் உள்ள நல்லன எல்லாம் வட மொழியினர் கூட்டுறவால் உண்டாயினவே என்று எழுதப்பெற்ற ஆங்கில ஆராய்ச்சி நூல்களையும் படித்தார். தமது சிறந்த தமிழ்ப் புலமையைக்கொண்டு உண்மைகளை ஆராய்ந்தார். தமிழர் நாகரிகத் திலும் பண்பாட்டிலும் சிறந்தவர் - தமிழ் மொழி காலத்தால் பழமை யும் இலக்கியத்தால் பெருமையும் உடைய மொழி என்பதை அறிந்தார். இவற்றைத் தக்க சான்றுகளுடன் ஆங்கிலத்தில் வெளி யிட விரும்பினர். அம்முயற்சிக்காகவே தமிழ்த் தொன்மை ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை நிறுவினர்; அதன்சார்பில் "தமிழ்த் தொன்மை ஆராய்ச்சி" என்ற ஆங்கில இதழை வெளியிடத் தொடங்கினர்; சித்தாந்த தீபிகை முதலிய அக்கால ஆங்கில இதழ்களிலும் பல கட்டுரைகள் வரைந்தார்.

தமிழ்த் தொன்மை ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் பண்டிதரோடு அவரது ஆங்கில ஆராய்ச்சி மலரில் கட்டுரை வரைந்த பெரியார் பலராவர். அவருள் வி. ஜே. தம்பிப் பிள்ளை, கே. ஜி. சேஷய்யர், வி. பி. சுப்பிரமணிய முதலியார், ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை, இ. எஸ். டபிள்யூ, சேனாதிராசர், டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், திவான்பகதூர், டி. தேசிகாசாரியார், திவான்பகதூர் டி. எம். அரங்காசாரியார், டி. சதாசிவ ஐயர், டி. எ. இராமலிங்கம் செட்டியார், வி. கனகசபைப் பிள்ளை, எம். சீவரத்தினம், சி. திருமலை நாயடு, மு. இராகவையங்கார் என்பவர் குறிக்கத் தக்கவராவர்.

ஆராய்ச்சி அறிவு

சவரிராயர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவாகும். ஒவ்வொரு கட்டுரையின் அடியிலும் இவர் மேற்கோளா கக் காட்டியுள்ள நூல்கள் பலவாகும்; ஆராய்ச்சி இதழ்கள் பலவாகும். அவை இவரது ஆழ்ந்த புலமையையும் அகன்ற அறிவினையும் நன்கு உணர்த்தவல்லவை.

இவர் எழுதியுள்ள பல கட்டுரைகளுள் பரத நிலம் அல்லது திராவிட இந்தியா, தமிழரசர்க்கும் பாண்டவர்க்கும் இருந்த உறவு சேர-கேரள என்னும் சொற்கள் பற்றிய குறிப்பு, ஆரியர் - தமிழர் கலப்பு என்னும் கட்டுரைகள் இவர்தம் பன்னூல் புலமையும், பரந்த ஆராய்ச்சி அறிவையும், நன்கு விளக்கவல்லவை. பிறர் வரைந் துள்ள பொருத்தமற்ற கூற்றுக்களை இவர் எடுத்துக்காட்டிக் கண் டிக்கும் திறம் பாராட்டுதற்குரியது.

(1) "பலுசிஸ்தானத்தில் வாழும் 'ப்ராஹுயி' என்னும் மொழியைப் பேசுகின்ற மக்கள் தங்கள் முன்னோர் அலெபோ என்னும் இடத்திலிருந்து வந்தவர் எனக் கூறுகின்றனர்; அக் கூற்றை நம்பினல், இவர் முன்னோர் ஆரிய இனத்தவராகலாம்," என்று கால்டுவெல் கூறியுள்ளார். அதுபற்றி எழுதும்போது சவரிராயர், "டாக்டர். கால்டுவெல் எந்த அடிப்படைமீது இக் கருத்தை உணர்த்துகிருர் என்பது நமக்குத் தெரியவில்லை. இது தாமாக வலிந்துகொண்ட தேவையற்ற கருத்து என்பதை நாம் வருத்தத்தோடு சுட்ட வேண்டுபவராக இருக்கின்ருேம்," [10] என்று எழுதியிருப்பது கவனிக்கத்தகும்.

(2) சந்திரகுப்த மௌரியரின் காலத்தில் வாழ்ந்த மெகஸ்தனீஸ் தமிழகத்தைப்பற்றிக் கீழ்வருமாறு எழுதியுள்ளான்: "ரஹுரக்ளிஸுக்கும் பண்டேயா என்ற மகள் இருந்தாள். இந்தியாவின் கடலோரத் தென்பகுதியை தந்தை அம்மகளுக்கு வழங்கினுன், அப்பகுதியை 365 கிராமங்களாகப் பிரித்தான்; ஒவ்வொரு கிராமத்தாரும் ஒரு நாள் வீதம் அவர்களுக்குக் கப்பம் கட்ட ஏற்பாடு செய்தான் * "அறிஞர் ஆர். சி. டட் தாம் வரைந்த "பண்டை இந்தியா" (Ancient India) என்னும் நூலில் மெகஸ்தனீஸ் கூற்றைப் பயன்படுத்தவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் ஒரு கட்டுரையில் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்" [11].

(3) இராவணன் சீதையை எடுத்துச் சென்ருன் என்ற இராமாயணக்கதை, "உழவர் தொழில் வடநாட்டிலிருந்து தென்ஞட்டிற்குச் சென்றது என்னும் உண்மையை உணர்த்துவதாகும்" என்று டட் தமது நூலில் கூறியுள்ளார்.

உழு-தமிழ், -உர்-(உழு) துளு மொழி. ஊர்-வயல்களால் சூழப்பட்ட இடம் என ஆராய்ச்சி செய்த சவரிராயர், "உழவு என்பது தமிழ்ச் சொல்; உழவு தமிழகத்துக்கே பழையது. இந்த உண்மையை உணராமல் ஆர். சி. டட் என்பவர் இராமாயணக் கதையைத் தம் மனம் போனவாறு பொருத்தமற்ற முறையில் பொருள் கொள்ளுதல் எவ்வளவு பொருத்தமற்றது" என்று வருந்தி எழுதியுள்ளார். [12]

(4) 'கேர' என்னும் சொல் சேகரம் (முடி) என்னும் வட சொல்லிலிருந்து வந்தது, 'கேரள' என்பது 'நாளிகேரம்'

---

10 We do not know on what grounds Dr. Caldwell bases his opinion. We are sorry to note it is an unwarranted assertion".—Tamilian Antiquary, 1913, p. 7.

Ancient India as described by Megasthenes and Arrian, J. W. Mc, Prindel, pp. 158—159.

11. "It is regrettable that owing to utter want of information regarding Southern India, so great a historian as R. C. Dutt has not been able to claim the valuable evidence furnished by Megasthenes to any part of India". Tamilian Antiquary, 1913, p. 56.

12 "How different is this from the assumption of Mr. Dutt that the art of agriculture spread from the north to the south and all from a fanciful and an ingenious reconstruction of the great stories!"—Tamilian Antiquary, 1913, p. 20.

(தேங்காய்) என்னும் சொல்லிலிருந்து வந்தது" என்று வடமொழி வாணர் கூறியும் எழுதியும் வந்தனர். அதற்குப் பண்டிதர் சவரிராயர் கீழ்வரும் விளக்கத்தைத் தந்து அவர்களை வாயடங்கச்செய்தார்.

கன்னடநாடு சேரநாட்டின் வடக்கே இருப்பது. 'சேரர்' என்னும் சொல்லும் 'கேரலர்' என்னும் சொல்லும் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட புறநானூறு முதலிய நூல்களில் காணப்படுகின்றன, ஆதலால் அவை காலத்தால் பழமை வாய்ந்த சொற்களாகும். தமிழில் 'செதான்' என்பது கன்னடத்தில் 'கெதான்', (Geydan) எனவரும், 'சென்னி' என்பது 'கென்னி' எனவரும்' 'செவி' என்பது 'கிவி' எனவரும். அதாவது தமிழ்ச் 'ச' கன்னடரால் 'க' என உச்சரிக்கப்பெறும். ஆதலால் 'சேரர்' என்னும் பழந்தமிழ்ச்சொல் 'கேரர்' என்றும் 'சேரலர்' என்பது 'கேரலர்' என்றும் கன்னடரால் கூறப்பெற்றிருத்தல்வேண்டும். அவ்வாறே 'சேரலம்' என்பது 'கேரலம்', 'கேரளம்' என வந்திருத்தல் வேண்டும் என்று சொல் ஆராய்ச்சிகொண்டு பண்டிதர் விளக்கியிருத்தல் பாராட்டத்தக்கது [13].

வேண்டுகோள்

மாண்புமிக்க இவ்வாராய்ச்சிப் பேரறிஞரது பெரும்புலமையும் ஆராய்ச்சி அறிவும் இன்று உள்ள தமிழர்க்குத் தெரிய வழியில்லை. சவரிராயர் காலத்துத் தமிழ் மக்களுக்கு இருந்த தமிழ்ப் பற்றைவிட இன்றுள்ள தமிழ் மக்களுக்கு மிகுந்த அளவு பற்று வளர்ந்து வருகிறது. ஆராய்ச்சிக் கண்கொண்டு எதனிலும் உண்மை காண வேண்டும் என்னும் பேரவா இக்கால இளைஞரிடம் பெருகிவருகிறது. இப் பொற்காலத்தில்தான் சவரிராயரின் அழுத்தமான ஆராய்ச்சி தமிழ் மக்களிடையே பரவுதல் வேண்டும். தமிழரின் தொன்மையையும் பெருமையையும் அழுத்தந் திருத்தமாக அறையும் அவர் கட்டுரைகள் இக்கால இளைஞர்க்கு இனிய விருந்தாக அமைதல் வேண்டும். ஆதலால் அவற்றைத் தொகுத்து வெளியிடல் அவர் தம் நன்மக்கள் கடமையாகும்; அக் கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டால்தான் தமிழ்நாட்டுப் புலவர்களும் பொதுமக்களும் படித்து ஊக்கம்பெற இடமுண்டாகும். இத்திருத் தொண்டினைச் செய்யும்படி பண்டிதர் சவரிராயருடைய நன்மக்களையும் தமிழ் ஆர்வம் கொண்ட பெருமக்களையும் வேண்டுகிறேன்.

பண்டிதர் சவரிராயர் மரபு இந்நாட்டில் வாழ்வதாக! அவரது திருப்பெயர் தமிழர் உள்ளங்களில் நின்று நிலவுக!

---

13 "Thus we can have no hesitation in saying that 'Chera' is a contraction of 'Cheralana and that cherala and Kerala are etymologically and historically the same and that Kerala is of more recent Origin than Cherala, the South Indian classical word, as the latter is recorded in Purananuru of the Sangam Age".—Tamilian Antiquary, 1913, pp. 63—64.

"ஆசார்ய போகம்."

வித்துவான், திரு-அடிகளாசிரியர்,
தமிழ் விரிவுரையாளர்; கரந்தைப் புலவர் கல்லூரி.

தஞ்சை இராசராசேச்சுரத் திருக்கோவிலின் கருப்பயில்லில் தென்புறத்திலுள்ள முதற்படை இரண்டாம் படைகளில் வெட்டப்பட்ட முதலாம் இராசேந்திர சோழதேவன் கல்வெட்டு அவன் கொடுத்த ஆசார்ய போகத்தைப் பற்றிய செய்தியைக் கூறுகிறது.

கல்வெட்டு.

"கோப்பரகேசரி வர்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு ௰௯ஆவது நாள் இருபத்திரண்டினால் உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் கங்கைகொண்ட சோழ புரத்துக் கோயிலினுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்து தேவாரத்துச் சுற்றுக் கல்லூரியில் தாநஞ் செய்தருளாவிருந்து, உடையார் ஸ்ரீ ராஜராஜ ஈஸ்வரமுடையார் கோயிலில் ஆசார்ய போகம் நம் உடையார் சர்வசிவ பண்டித சைவாசார்யர்க்கும் இவ்வுடையார் சிஷ்யரும் ப்ரசிஷ்யருமாய் [1] ஆர்ய தேசத்தும், மத்திய தேசத்துத்தான், கௌடதேசத்துத்தான் உள்ளாராய் யோக்யராயிருப்பார்க்கே ஆட்டாண்டு தோறும் இத்தேவர் கோயிலில் ஆடவல்லான் என்னும் மரக்காலால் உள்ளூர்ப் பண்டாரத்தே நிறைச்சளவாக இரண்டாயிரக் கல நெல்லு ஆட்டாண்டுதோறும் சந்திராதித்தவல் பெறத் திருவாய் மொழிந்தருளத் திருமந்திர ஓலை செம்பியன் விழுப்பரையன் எழுத்தினால் திருவாய்க்கேள்விப்படி கல்லில் வெட்டித்து இது. இவ்வம்சத்துள்ள சைவ ஆசாரியர்களே இத்தன்மம் ரக்ஷிக்க" என்பது அக்கல்வெட்டின் செய்தியைக் கூறும் பகுதியாகும்.

அறிஞர் கருத்து.

இக்கல்வெட்டைப் படித்த அறிஞரெல்லாம் இராசேந்திர சோழதேவனுக்குச் சைவாசாரியாய் விளங்கியவர் சர்வசிவ பண்டிதரென்றும் அவருக்கு இரண்டாயிரக்கல நெல் யாண்டு தோறும் அளிக்குமாறு ஏற்பாடு செய்தானென்றும்; அரசனின் ஆசிரியராகிய சர்வசிவ பண்டிதரும் அவருடைய சீடர்களும் எந்த நாட்டிலிருந்த போதிலும் கொடுக்கும்படி ஆசார்ய போக

குறிப்பு :- 1 "ஆர்ய தேசத்தில் உள்ள பலதேசங்களில் மத்திய கௌட தேசங்களில் தோன்றியுள்ளாராய் சைவாசாரியம் செய்ய யோக்கியராயிருப்பார்க்கே" என்று கருத்து.

மாக ஆண்டுதோறும் நெல் அளப்பதற்கு ஆணை பிறப்பிக்கப் பட்டதென்றும் எழுதியுள்ளனர். இவர்கள் கருத்து முற்றிலும் சரியா என்பதை நாம் ஆராய்வோம்.

அறிஞர் கருதுக.

மேற்கண்ட கல்வெட்டுத் தொடர், 'ராசேந்திர சோழ தேவனாகிய தனக்கு ஆசார்யராகிய சர்வசிவ பண்டிதர்க்கு' என்று எழுதப்படவில்லை; "ஸ்ரீ ராஜராஜ ஈஸ்வரமுடையார் கோயிலில் ஆசார்ய போகம் நம் உடையார் சர்வசிவ பண்டித சைவ ஆசாரியார்க்கும்" என்றே எழுதப்பட்டுள்ளது. அதனால் சர்வசிவ பண்டிதர் ராஜராஜேஸ்வரமுடையார் கோவிலில் சைவாசாரியம் செய்பவராக யிருந்ததோடல்லாமல் இராசேந்திர சோழனுக்கும் சைவாசாரியராய் இருந்தனர் என்னும் உண்மை துணியப்படுகின்றது.

தேவகாரியம் பார்ப்போர்.

சிவாலயங்களில் சைவாசாரியம் செய்பவரைப்பற்றி நாம் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். காமிகாகமம் ஆசார்ய லட்சணப் படலத்தில் ஆசாரியரைப் பற்றிய செய்திகள் பல கூறப்பட்டுள்ளன. "தேவ காரியம் பார்ப்போர் ஆசாரியர், அர்ச்சகர், ஸ்தானீகர், பாசகர், பரிசாரகர் என்று ஐவராவார். (சுலோகம்–11–12) ஆசார்யனுக்கு விதிக்கப்பட்ட சமஸ்காரங்கள் ஏழுவகையாகும்; அவை சமயம், விசேடம், நிர்வாணம், அஸ்திராபிடேகம், ஆசார்யாபிடேகம், சிகாச்சேதனம், ஏழு விஷவங்களின் சோதனம் என்பவையாகும். (16–17) ஆசாரியர் நாட்பூசையாகிய நித்தியமும் உத்சவம் பிரதிஷ்டையாகிய நைமித்திகமும் காமியமாகிய பிராயச்சித்தமும் செய்வதற்குரியவராவார். (12) அர்ச்சகர்க்குச் சமயம் முதல் சிகாச்சேதனம்வரை ஆறு சமஸ்காரங்கள் விதிக்கப்பட்டுள்ளன. இவர் நாட்பூசையாகிய நித்தியம் மட்டும் செய்தற்குரியர்; உத்சவம் பிரதிட்டை பிராயச்சித்தம் என்பவைகளைச் செய்தல் கூடாது (13) ஸ்தானீகர்க்குச் சமயம் முதல் ஆசார்யாபிடேகம் ஈறாகிய ஐந்து சமஸ்காரங்கள் விதிக்கப்பட்டுள்ளன; (27) இவர் உத்சவ விக்கிரகங்கட்கு அலங்காரம் மட்டும் செய்யலாம்; மூலலிங்கத்தைத் தீண்டுதல் கூடாது (29). பாசகர்க்குச் சமயம் முதலான நான்கு சமஸ்காரங்கள் விதிக்கப்பெற்றுள்ளன; (30) இவர் சிவாக்னியினால் சமயல் முதலானவற்றைச் செய்யவேண்டும். (14) பரிசாரகருக்குச் சமயம் முதலான மூன்று சமஸ்காரங்கள் விதிக்கப்பட்டுள்ளன; (32) அபிடேக தீர்த்தம் பூசைக்கு வேண்டும் பொருள் முதலானவற்றைத் தயாரித்து வைத்தல் இவர்க்குரிய தொழிலாகும்;

இவற்றிற்கு வேறுபட்ட தொழில்களை இவர்கள் செய்தல் கூடாது. (15)" என்று தேவகாரியம்பார்ப்பவரின் வகைகளையும் பெயர்களையும் அவர்களுக்குள்ள சமஸ்காரங்களையும் செயல்களையும் அவ்வாகமம் விளக்கமாகக் கூறியுள்ளது.

மேற்குறிப்பிட்ட காமிகாகம வசனங்களால் திருக்கோவில்களில் தேவகாரியம் செய்யும் ஐவருள் ஆசாரியர் முதல்வர் என்பதை அறிந்துகொண்டோம். மேலும் ஆசாரியரின் வகைகளைப்பற்றி அவ்வாகமம் கூறும் செய்திகளையும் பார்ப்போம்.

ஆசாரியர் வகை.

"ஆசாரியர் சர்வசாதகர், போதகர், ஆசார்யர் என்று மூன்று வகையினராயிருப்பர் (65) எல்லாத் தத்துவார்த்தங்களிலும் பாண்டித்தியமுள்ளவராய், மந்திரம், கிரியை, பாவனை முதலிய எல்லாக் கர்மங்களையும் (சர்வ தத்துவார்த்தங்களையும் சர்வ கர்மங்களையும்) செவ்வையாய் அறிந்திருப்பவர் 'சர்வ சாதகர்' என்று கூறப்படுவார். மந்திரம், கிரியை, பாவனை இவைகளைப் போதகம் செய்பவர் போதகரெனக் கூறப்படுவர். எல்லாக் கர்மங்களையும் ஆசரிப்பவர் ஆசார்யரெனக் கூறப்படுவார் (66) ஆசார்யரைக் காட்டிலும் போதகாசிரியர் மேலானவர்; போதகரைக் காட்டிலும் சர்வசாதக ஆசாரியர் மேலானவராவார் (67).

மேற்கண்ட ஆகம வசனங்களை வைத்துக்கொண்டு மேற்குறித்த கல்வெட்டிற்கண்ட சைவாசாரியர்க்குச் 'சர்வசிவ பண்டிதர்' என்று பெயரிருத்தலை நோக்கினல், அப்பண்டிதர் மூன்று வகையான ஆசாரியரில் தலைமையான 'சர்வ சாதகர்' என்னும் ஆசாரியராவார் என்பது புலனுகின்றது. சர்வ சாதகர், சர்வசிவ பண்டிதர் என்னும் சொற்களில் உள்ள 'சர்வ' என்னும் சொல்லை அறிஞர் கருதிப் பார்க்கவேண்டும்.

மேலும் அவ்வாகமம் கூறும் சில செய்திகளைப் பார்ப்போம். "இந்த மூன்றுவகையான ஆசாரியர்களும் உத்சவம் பிரதிட்டை முதலான காரியங்களைச் செய்யும்பொழுது, தனியே சாதகர் ஒருவரைத் தங்களுக்கு உதவியாக உடன்வைத்துக் கொண்டு செய்தல் வேண்டும் (68)." என்று கூறுகின்றது. இவரைச் சாதகாசாரியர் என்று கூறுவோம்.

மேற்கண்ட கல்வெட்டில், சர்வசிவ பண்டிதரின் சிஷ்யரும் ப்ரசிஷ்யருமாய்க் குறிக்கப்பட்டவர் மேற்படி பண்டிதருக்கு உத்சவம் முதலான காரியங்களில் சாதகராயிருக்கும் போதகர் முதலான ஆசாரியரும் சாதகாசாரியருமாவார்.

சோழன் ஆணையின் கருத்து.

இராசராசேச்சுரமுடையார் கோயிலில் மேற்கண்டபடி சைவாசாரியம் செய்யும் சர்வசிவ பண்டிதருக்கும், அவருடைய சிஷ்யரும் ப்ரசிஷ்யருமாய் ஆர்யதேசத்திலும் மத்திய கௌட தேசங்களில் தோன்றியுள்ளவராய் மேற்படி கோவிலில் சைவாசாரியம் செய்ய யோக்யராயிருப்பார்க்கே ஆண்டாண்டுதோறும் கோவிலிலுள்ள வருமானத்திலிருந்து இரண்டாயிரக்கல நெல்லை ஆசார்ய போகமாகக் கொடுக்க இராசேந்திர சோழதேவன் ஆணையிட்டானேயன்றி, சர்வசிவ பண்டிதர் தனக்கு ஆசார்யராயிருக்கின்றார் என்ற ஒன்றைமட்டும் கருத்தில் வைத்துக்கொண்டு அவரும் அவருடைய சீடர்களும் எந்த நாட்டில் இருந்த போதிலும் ஒவ்வொருவருக்கும் இரண்டாயிரக்கலக் கோவில் நெல்லை அளந்துவிட வேண்டும் என்று ஆணையிட்டானல்லன். மேற்கண்ட கல்வெட்டில் 'கோயிலில் ஆசார்யபோகம்' என்னும் சொற்றொடரை அறிஞர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பஞ்சாசார்யர்.

பல கல்வெட்டுகளில் 'பரியார மூலப்பட்டுடைப் பஞ்சாசாரிய தேவகன்மிகள்' என்றும், 'பதிபாத அல்லது பிரதிபாத மூலப்பட்டுடைப் பஞ்சாசாரிய தேவகன்மிகள்' என்றும் வரும் சொற்றொடருக்குக் கல்வெட்டுத் துறையினர் 'Panchacharya who wears a Silk garment (in honour of) the feet of the Lord of the temple' என்று விளக்கம் எழுதியுள்ளனர். பிறரெல்லாம் கோயில் அருச்சகர் என்று குறித்துப் போந்தனர். பஞ்சாசாரியர் இன்னார் என்பதை

> " ஆசார்யாதி ஸமாரப்ய பரிசார சமாவதி |
> பஞ்சா சார்ய மிதிக்யாதம் தத்தத் ஸம்ஸ்காரகுண்ய த: | | "
>
> காமிகம்—ஆசார்—62)

"ஆசாரியர் முதலாகப் பரிசாரக ரிறுதியாய் அவரவர் சமஸ்காரானுகுணமாய்ப் பஞ்சாசார்யரெனப்படுவார்" என்னும் காமிக சுலோகத்தால் ஆசாரியர், அர்ச்சகர், ஸ்தானீகர், பாசகர், பரிசாரகர் என்னும் ஐவரும் பஞ்சாசாரியர் என்று வழங்கப் படுவார் என்பதை அறிந்து கொள்கின்றோம். இப்பஞ்சாசாரியரின் ஒழுக்கத்தை

> " நெஞ்சாசார நிறைவொடு குறையாப்
> பஞ்சா சாரியப் பகுதி யோர்க்கும் "
>
> (தென்—வால்யூம்—7—940)

என்று கல்வெட்டொன்று கூறுவதைக் காண்க.

"தமிழ்ப் பொழில்" 196-ஆம் பக்கத் தொடர்ச்சி.

தமிழில் தாவரம்.

கு. சீநிவாசன், M. Sc.,
தாவர விரிவுரையாளர், அண்ணாமலைநகர்.

தேமா—புளிமா :

தேமா உள்ளிட்ட மாஞ்சிபெரா (Mangifera) இனத்தில் சற்றேறக்குறைய முப்பது வகைகள் உள்ளன. மாஞ்சிபெரா இண்டிகா (Mangifera indica) எனப்படும் தேமாவின் பலப் பல உள்வகைகள் (Verieties) ஒட்டுமா என இற்றை நாளில் பயிரிடப்படுகின்றன. ஒட்டுமா என்பது ஒரு மாங்கிளையை மற்றொரு நல்ல மாமரத்தில் ஒட்டவைத்து வளர்ப்பதொன்று. பொதுவாக ஒட்டுச் செடிகள் இருவகையாக ஒட்டப்படுகின்றன. இருவேறு மரங்களின் கிளைகளையே ஒட்டுதல் கிராப்டிங் (Grafting) எனப்படும். ஒரு மரத்திலுள்ள கணுக் குருத்தை அகற்றி அவ்விடத்தில் மற்றொரு மரத்தின் கணுக் குருத்தை ஒட்டவைத்தல் பட்டிங் (Budding) எனப்படும். இவ்விரு வகையான ஒட்டுதலிலும் பயிர் நூலார் (Agricultural Scientists) பல்வேறு முறைகளைக் கையாளுகின்றனர். இவ்வாறு ஒட்டிய மாமரத்தில் உண்டாகும் கனிகள் சுவை மிகுந்திருக்கின்றன. இங்ஙனம் ஒட்டப்பட்ட இரு மாங்கிளைகளும் தனித் தனித் தழைத்துக் காய்க்குமெனில் அக்கனிகளின் சுவை வேறுபடும். அன்றி ஒரு ஒட்டு மாங்கனியின் சுவை அதனின்றும் தோன்றிக் காய்த்த கனியில் இருக்காது. தேமாவின் வண்ண நொசி எண் (Chromosome number) $2X = 40$; $X = 10$ என 1950-ஆம் ஆண்டில் முகர்ஜி (Mukherjee) என்பவர் கண்டு சொன்னார். புளிமாவிற்குரிய வண்ண நொசி எண் இதுகாறும் அறியப்படவில்லை.

---

274 ஆம் பக்கத் தொடர்ச்சி.

முடிப்புரை.

கல்வெட்டாராய்ச்சியை எல்லாரும் மிக எளிமையாகச் செய்துவிடமுடியும் என்று சிலர் கருதுகின்றனர். நம் தமிழ் நாட்டுக் கல்வெட்டுகளை ஆராய்வதற்குத் தமிழிலக்கிய உணர்ச்சியும் வடமொழியறிவும் உலகியலறிவும் நன்கு வாய்க்கப் பெற்றவரே தகுதியாவர் என்பதைத் தமிழுலகம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சங்கத் தமிழில் தலைசிறந்ததாகிய குறிஞ்சிப்பாட்டில் கபிலர்,

செங்கொடு வேரி தேமா மணிச்சிகை —குறிஞ்-64.

எனவும்,

காந்தை குளவி கடிகமழ் கலிமா —குறிஞ்-76.

எனவும் குறிப்பிடுகின்றார். இவ்வடிகளிலுள்ள மாவிற்கு, நச்சினார்க்கினியர் முறையே 'தேமாம்பூ' என்றும், 'விரை கமழும் தழைத்த மாம்பூ' என்றும் உரை கூறினர். இவை யிரண்டும் தேமாவினையே குறிக்குமெனல் பொருந்தாது. என்னை? கபிலர் கூறியது கூறார் ஆகலின் என்க. ஆகவே 'தேமா' என்பது தேமாவினையும் 'கலிமா' என்பது புளிமா வினையும் குறித்தல் கூடும். எனினும் சங்கத் தமிழில் தேமாவைப் போல, புளிமாவைப்பற்றிய குறிப்புக்கள் காணுதற்கில்லை

தேமா மரத்தின் இளந்தளிர், முற்றிய இலைபோலாது சிறிய செந்நிறங் கலந்து அழகாகத் தொங்கும். இதனை 'வடி முறி' என்பர். இந்நிறத்தை மகளிர் மேனிக்கு உவமித்த சில பாக்கள் பின் வருமாறு :—

தேமா மேனிச் சில்வளை ஆயமொடு —சிறுபா-176.

பைங்கால் மாஅத் தந்தளி ரன்ன
நன்மா மேனி பசப்ப —குறுந்-331.

வேனிற்காலத்து மாந்தளிர் தழைக்கும். தளிர் தந்த மாமரம் கவினுறத் தோன்றும். மாமரத்திலிருந்து குயில் கூவும். இங்ஙன மாக மெய், கண், மூக்கு, செவியாகிய பொறிகட்கு இன்பம் தரும். தாதுகு தண்பொழில் தன்னுடன் தங்கி நலன் நுகர் வகை விடுத்து, பொன்னை நயந்து பிரிதல் நன்றோ என, பிரிவுணர்த்திய தோழியிடம் தலைவி கவன்றுரைக்கும் பாக்களும் உள்ளன.

... ... குயிலும்
தேம்பாய் மாஅத்து ஓங்குசினை விளிக்கும்
—அகம்-341.

மாவும் வண்டளிர் ஈன்றன குயிலும்
இன்தீம் பல்குரல் கொம்பர் நவலும் —அகம்-355.

அடைகரை மாஅத்து அலங்குசினை பொலியத்
தளிர்கவின் எய்திய தண்ணறும் பொதும்பில்

—நற்-118.

அலங்குசினை பொதுளிய நறுவடி மா அத்துப்
பொதும்புதோ றல்கும் பூங்கண் ணிருங்குயில்

—நற்றி-243.

என வருவன காண்க.

மாம்பூ கொத்துக் கொத்தாகக் கணுக் குருத்தாகவும் நுனிக் குருத்தாகவும் அரும்பிப் பூக்கும். மிகச்சிறிய இப்பூவில் நான்கு அல்லது ஐந்து புறவிதழ்களும், நான்கு அல்லது ஐந்து அக விதழ்களும் உள்ளன. ஒன்றுமுதல் ஐந்து கேசரங்கள் (காதி ழைகள்) உண்டென்னும் ஒன்று அல்லது இரண்டு மட்டும் தாது விளைந்து நிற்கும். தாதுப்பை செந்நிறமானது. பூவினடியில் தாதிழைகளை (Stamens) ஒட்டி நான்கு அல்லது ஐந்து தேன் சுரப்பிகள் (Nectaries) இருத்தலின் மலரில் வண்டினம் மூசும். இதனை

காமர் மாஅத்துத் தாதமர் பூவின்
வண்டுவீழ் பயருங் கானல் —குறுந்-306

என்ற அடிகளிற் காணலாம். பூவின் கரு ஓரறையினது. பெரிதும் பிற மகரந்தச் சேர்க்கையால்தான் (Gross-Pollination) கரு முதிர்ந்து காய்க்கும். மாமரத்தில் ஒருவகையான பால் (Latex) உண்டு. மாவடுவில் இப்பால் மிகுதியாகப் பிலிற்றும். இரும்பினலாய அரிவாள் கொண்டு மாவடுவை நேராகப் பிளந்து சிறிது நேரங்கழித்துப் பார்த்தால் வடுவின் விதைப் பகுதி முழுவதும் கருத்தும் காய்ப்பகுதி வெண்ணிற மாகவும் கண்விழியை ஒத்து மிக அழகாகக் காணப்படும். இதனை வண்ணமும் வடிவுங் கருதி மகளிர் கண்ணுக்கு உவமிப்பர்.

இளமாங்காய்ப் போழ்ந்தன்ன கண்ணினால் என்னெஞ்சம்
களமாக்கொண் டாண்டாயோர் கள்வியை யல்லையோ

—(கலி-108)

என்பது தலைமகளின் கண்ணிற்குவமித்த கலித்தொகை.

மாவடு வகிரன்ன கண்ணி பங்கா

(திருவா-அடைக்கலப்பத்து-8)

என்பது மணிவாசகப் பெருந்தகை, அம்மையின் கண்ணை உவமித்து, உமையொரு பாகனை அடைக்கலம்புக்கு அரற்றிய அருந்தமிழ்ச் சொற்றொடர். இரும்புக் கருவிகளைக்கொண்டு மாவடுவைப் பிளக்கும்போது வடுவிலுள்ள பாலில் காணப்படும் (Gallic acid, Stearic acid) ஒருவகை அமிலங்கள் இரும்பில் பட்டவுடன் ஒருவகை மைப் பொருள் ஆகின்றது. இதனை ஒரு பிரான்சு தேசத்து வேதி நூலறிஞர் (Chemist) கண்டு பல சோதனைகளைச் செய்துள்ளார். மாவடுவின் தோலிலும் இதே பால் இருத்தலின் அப்பகுதியும் கறுப்பாகி கண்ணுக் கெழுதிய அஞ்சனம்போலத் தோன்றும்.

ஆல்பர்ட் ஹில் (Albert F. Hill) என்பார் தேமாவைப் பற்றிப் பின் வருமாறு கூறுகின்றார். வெப்பம் மிக்க நாடுகளில் தொன்று தொட்டு பயிரிடப்படுகின்ற பழந்தரு மரங்களில் தேமா மரம் தலையாயது. ஏறக்குறைய ஆறாயிரம் ஆண்டுகளாக இம்மரம் பயிர் செய்யப்படுகின்றது. இது இந்திய நாட்டின் புனிதமான மரமாகும். தென்னாசியக் கண்டத்தில் தோன்றிய இம்மரம் இப்பொழுது மலேயா, பர்மா, பாலினீசியா, ஆப்பிரிக்கா, வெம்மை சார்ந்த அமெரிக்கா முதலிய நாடுகளில் ஐந்நூறு உள் வகையினவாகப் பல்கிப் பயிராகின்றது. ஓராண்டிற்கு நூறாயிரம் டன் எடைக்கு மேலான மாம்பழம் உலகில் விளைகின்றது.

பொதுவாக மாமரம் தொண்ணூறு அடி உயரம் வரை ஓங்கியும் பருத்தும் வளரும். அடி மரம், மற்ற மரங்களைப்போல காழ்கொள்வதில்லை. எனினும் அகன்ற மாம்பலகைகள் பல வகையாகப் பயன்படுகின்றன. பண்டைக் காலந்தொட்டு, மாவிலைகொண்டு பல் துலக்கும் வழக்கம் தமிழ்நாட்டில் இருக் கின்றது. இவ்விலையில் குளோரோபில் (Chlorophyll) அமைந்த குளோரோபிளாஸ்ட் (Chloroplast) என்ற பச்சையம் (பச்சையணுக்கள்) மற்ற இலைகளில் உள்ளதைக் காட்டிலும் மிகுதியாக இருக்கின்றது. இவ்வணுக்களைப் பிரித்தெடுத்து, பற்பொடியில் கலந்து இந்நாளில் விற்கின்றனர். மாம்பழம் நல்ல சுவையுடையதாய் பலவேறு வண்ணமும் பல்வேறு வடிவு முடையதாய் இருக்கும். இதனையே,

வேறுபடக்கவினிய தேமாங் கனியும்

—மதுரைக்கா—528

என்றனர்.

ஆவணி இதழ் 153ஆம் பக்கத் தொடர்ச்சி.

சிற்றிலக்கியம் : 2.

ஆற்றுப்படை,

மது. ச. விமலானந்தம், எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், சரபோசி அரசர் கல்லூரி, தஞ்சை.

பரிசில் பெற்ருன் ஒருவன் பரிசில் பெறச் சமைந்து நிற்கும் ஒருவனை ஆற்றுப்படுத்தும் முறை அறிந்து இன்புறத் தக்கதாம்.

... ... செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை யாயின், பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னிசை வாய்ப்ப
இன்னே பெறுதி! நீ முன்னிய வினையே!

(முருகாற்றுப்படை 61—66)

இதன் கருத்து 'உன் நல்ல உள்ளத்தில் தோன்றிய எண்ணத்தை யாயினும், இனிய வீடுபேற்றையேனும் இன்னே பெற்று இன்புறு வாயாக' என்பதாகும். இதுபோன்றே, 'மற்றவர் புகழை அரசவை களில் மேம்படுத்த வல்லவனே! வாட்டுகின்ற பசியாலே வாடும் உன்னுடைய பெரிய சுற்றத்தாரின் பசிப்பிணியைப் போக்க விரும்பின், கரிகாற் பெருவளத்தானைக் காண உடனே புறப்படுவாயாக' எனப் பொருநன் ஒருவன் எதிர்ப்பட்ட பொருநனுக்கு எடுத்துக் கூறுவதாக அமையும் :

போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுந!
ஆடுபசி யுழந்தநின் இரும்பே ரொக்கலொடு
நீடுபசி யொராஅல் வேண்டின், நீடின்று
எழுமதி வாழி! ஏழின் கிழவ! (பொருநர் 60—63)

என்ற முடத்தாமக்கண்ணியார் கூற்றும்; பரிசு பெற்ற பாணன் ஒருவன் 'அறிவு ஆற்றல் அனைத்தையும் அழியச் செய்யும் கொடிய பசி நீங்குமாறு, மதம் பொழியும்—மணியசையும் கொல்லுதற் தொழிலில் வல்ல சிறிய கண்களையுடைய யானையோடு தேரையும் நல்லியக்கோடன்பால் பெற்று மீள்கின்றேன்; வறுமையால் நலியும் நின் பரந்த சுற்றத்தாரோடு அவ்வள்ளலை அணுகின் பசி போக்கிப் பரிசில் பல தந்து, சென்ற அன்றே விடை கொடுப்பான்' எனப் பரிசில்நாடி நிற்கும் பாணனை ஆற்றுப்படுப்பதாக நல்லூர் நத்தத்தனர் :

அழிபசி வருத்தம் வீடப் பொழிகவுள்
தறுகண் பூட்கைத் தயங்குமணி மருங்கின்
சிறுகண் யானையொடு பெருந்தே ரெய்தி
யாம்அவ ணின்றும் வருதும்; நீயிரும்
இவண்நயந் திருந்த இரும்பே ரொக்கல்
செம்மல் உள்ளமொடு செல்குவிர் ஆயின்......
.....................................தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசில்.

(சிறுபாண் 140—45, 260—61)

என, நயம்பட உரைப்பதும்,

பல்வேற் றிரையற் படர்குவிர் ஆயின்,
.................................தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசில்.

(பெரும்பாண் 37, 492—93)

எனக் கடியலூர் உருத்திரங் கண்ணனுர் ஓதுவதும் ஒப்புநோக்கி மகிழத்தக்கது. ஆடல் வல்ல கூத்தரும் இங்ஙனமே ஒருவருக் கொருவர் நெறிப்படுத்திக் கொள்வதனைப் பெருங்கௌசிகனுர் பாங்குற மொழிகின்ருர் பாருங்கள்; நன்னன்சேய் நன்னனை நண்ணுவீராயின், விரைந்து மழை வெகுவாகச் சொரிவதுபோன்று முதல்நாளே மிகுந்த பரிசில் தந்து மீளச் செய்யும் சீர்மையன் என்பதை:

நன்னன்சேய் நன்னற் படர்ந்த கொள்கையொடு
உள்ளினிர் சேறி ராயிற், ...
மழைசுரந் தன்ன ஈகை நல்கித்
தலைநாள் விடுக்கும் பரிசில்

(கூத்தர் 65, 580—81)

எனவும், இறைவனது பாதமலர்த்தேனை மாந்தி மகிழ்ந்து மீளும் வண்டு ஒன்று 'யாம் எடுத்தியம்பிய இறைவனைப் பாடிப் பரவி நாடிச் செல்வாயாகில் நீயும் செல்வம் மிகுதியாய்ப் பெறுவாய்; ஆனந்தத்தேனை அள்ளிப்பருகி அகமகிழ்வாய்! என இன்னெரு வண்டை வழிப்படுத்துவதாக அறிஞர் சிதம்பரநாதனுர்:

ஊதியே பார்த்தாய் உள்ளுள் உருகித்
தினைத்தனைத் தேனுணத் திரிதரும் தும்பி!
......சொல்லிய அம்மலர்த் துணையினைப்பாடிச்
செல்லின் நீயுஞ் செல்வை யாகுவை
அள்ளி யருந்துவை யானந்தத் தேனே!

(தேனுற்றுப்படை 8—9, 50—51)

எனக் கூறுவதும், 'திருவாவடுதுறையுறை குருமுதல்வர்பால் இன்றேசெல்லின் இதுகாறும் ஏதும் பெற்றிலேமே! என்செய்வேன்? என ஏங்கி அழுங்கிய நெஞ்சத்து ஆசை அலை அடங்கி ஒடுங்குமாறு

எண்ணிய—எதிர்பார்த்த எல்லா நலன்களையும் இன்றே ஈந்தருள்வார் என்னுமாற்றான் :

இன்றே செல்வுறின் இயல்புணர் புலவ!
இரங்கிய உள்ளத்து இன்னிசை யடங்க
இன்னே பெறுகுவை முன்னிய நலனே;

(நமச்சிவாயர் ஆற்றுப்படை 103—5)

என வரும் இற்றைநாள் ஆற்றுப்படையும்;

ஆங்கண் அன்னவற் காணநீ விழையின்......
வேயமர் தோழி! வீற்றுஇனிது இருப்பன்
நின்றன் காதலன், நேரிழாய்! காண்குவை;
அவண்நீ யடைஇ எண்ணிய வண்ணம்
இழந்தவுன் உள்ளந் தன்னைப் பெறுவை

(காதலியாற்றுப்படை 548, 853—5)

என வரும் ஈழத்து ஆற்றுப்படையையும் காணும்போது, ஆற்றுப் படை அனைத்திலும் ஒரேவகை நோக்கும் போக்கும் பண்பும் பெற்றி யும் நிற்றலைப் பார்க்கிறோம்.

ஆற்றுப்படையால் அறிய வருவன :

ஆற்றுப்படைச் சிற்றிலக்கியங்களை ஓதி யுணருங்கால் பரிசில் வாழ்க்கை பறவை வாழ்க்கையே போன்று பொலிந்து நிற்றலைப் பார்க்கின்றோம். வள்ளல்களை நாடி வழிபல கடந்து சென்று வாயார வாழ்த்திப் பரிசில் பெற்று, பெற்ற பெருவளனைத் தன்னலங்கருதாது வல்லாங்கு வாழ்தும் என்னது—வையத்துள் வாழ்வாங்கு வாழு மாற்றான் எல்லோர்க்கும் அகங்குளிர அள்ளித்தந்து அகமகிழும் பரிசில் நாடும் புலவர்தம் தூய நல்வாழ்வையும் வழியையும் பழுமரம் நாடும் பறவையின் கவலையற்ற வாழ்வோடு ஒப்பிட்டுக் காட்டு மாற்றான் :

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி
நெடிய என்னது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை. (புறம் 47)

எனக் கோவூர்கிழார் போன்ற புலவர் பெருமக்கள் தத்தம்வாழ்க்கையை பறவை வாழ்க்கையோடு இணைத்துக் காட்டி இன்புறுவதைக் காண்கின்றோம்.

பறவையும் பாவலரும் (Birds and Bards) பல்லாற்றான் ஒன்றிச் சொல்லும் ஒண்மை உணரத்தக்கது. பழுமரம் நாடிச் செல்லும்

பறவைகள் கூடியிருந்து கனிகள் உண்டு களித்து உவந்த பின்பு உணவு பற்றிய கவலை ஒருசிறிதுமின்றி ஆடிப்பாடி வான வீதியில் வாட்டம்தீர வட்டமிடும் அழகு அனைவரும் அறிந்ததே; அது போன்றே பண்புடைப் பெருவள்ளலை நாடிச் சென்று, நிறைய பொருள் பெற்று பகிர்ந்துண்டு பல்லுயிரோம்பி நாளை என்செய்குவம் என்ற நினைவு இம்மியுமின்றிச் செம்மாந்து பாடிச் சிந்தை மகிழ்வர் பாவலர். இரவலராகிய பறவைகட்குப் புரவலர்கள் உள்ளூர்ப் பழு மரங்கள்; பறவைகளாகிய புலவர்கட்குப் பழுமரம் கரவற்ற நெஞ்சமும் கருணையுள்ளமும் பொதுநலவுணர்வும் மிக்க வள்ளல்கள். கூடியிருந்து பழங்களை உண்டு உவந்த பறவைகள் கவலையற்று இயற்கையை எழில்பெறச் செய்கின்றன; கலைஞர்களும் பெற்ற அனைத்தையும் பிறர்க்குக் கொடுத்துப் பெருமகிழ்வெய்தி, பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடச் செய்வர். விண்ணில் பறந்து இயற்கை யன்னை எழில்பெறச் செய்கின்றன பறவைகள்; மண்ணில் திகழ்ந்து கலைக் கோயிலைக் கவினுறச் செய்கின்றனர் கலைஞர்கள். வருங் காலத்தைப் பற்றிப் பறவைகளும் கவலைப்படா; கலைஞர்களும் கவலைப் படார். கவலையற்ற நெஞ்சங்கள் இருவேறு நிலைகளில் இனிது வாழ்கின்றன; இன்பமூட்டுகின்றன.

தங்கு தடையின்றி வான வீதியில் மிதந்து திரிந்து மகிழும் பறவைகளைப் போன்றே, புலவர்களும் கவலையற்று, இவ்வுலக இன்னல்களை மறந்து துறந்து கற்பனைத் திறத்தால்-மனமென்னும் சிறகால்—உள்ளத்தால் உயர்ந்து சிறந்து உளம் மகிழ்கின்றனர்; உலகை மகிழ்விக்கின்றனர். இஃது ஆற்றுப்படை இலக்கியங்களி னூடே அமைந்துள்ளமை அறிந்து இன்புறத் தக்கதாம்:

பழுமரம் உள்ளிய பறவையின் யானுமவன்
இழுமென் சும்மை இடனுடை வரைப்பின்
நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்
இசையேன் புக்கு (பொருநர் 64—67)

பழுமரம் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
(பெரும்பாண் 20—21)

கனிபொழி கானம் கிளையொடு உணீஇய
துனைபறை நிவக்கும் புள்ளினம் (கூத்தர் 54—55)

எனப் பொருநனும், பாணனும், கூத்தரும் கூறி மகிழ்வதாக முறையே முடத்தாமக் கண்ணியாரும், கடியலூர் உருத்திரங் கண்ணனாரும், பெருங்குன்றூர் பெருங்கௌசிகனாரும் பாடிச் செல்வது காண்க. இதனால், கருணையுள்ளமும் பொதுநலவுணர்வும், கல்விச் செழுமை யும் காட்சி எளிமையும் மிக்க வள்ளல்களே இம்மென்மையுள்ளம் படைத்த கலைச்செல்வர்கள் நாடும் பழமரங்கள் என்றும், இக்கலைப் பறவைகளின் கற்பனை வாழ்வே—கனிவுறு வாழ்க்கையே ஆற்றுப் படையில் காணக்கிடக்கும் கருத்துக் கருவூலம் என்றும் கண்டோம்.

இரவலர் இயல்பும் ஏற்றமும் :

தத்தம் முன்னை நிலையினை எண்ணி உணரும் எவரும், பிறர் இன்னலையும் தத்தம் இன்னல்போல் கருதித் தாம் இன்னலினின்றும் விடுபட்டு இன்புறும் நிலையைப் பிறருக்கு உணர்த்துவர். அம்முறையில்தான் புலவரும் பொருநரும், பாணரும், கூத்தரும் தம்தம் பண்டை வாழ்வினை எண்ணிப் பண்படுவதோடு முன்னை நிலையினை எடுத்தோதவும் காண்கின்றோம். இதனை ஆற்றுப்படை இலக்கியங்களும் விலக்காது குறித்துச் செல்வதும் சிந்திக்கத் தக்கதாகும் :

ஈரும் பேனும் இருந்திறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் ... ...
மாலை யன்னதோர் புன்மையுங் காலைக்
கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்
கனவென மருண்டவென் நெஞ்சே.

(பொருநர் 79—81,—96—98)

பழம்பசி கூர்ந்தவெம் இரும்பே ரொக்கல்
பாசி யன்ன சிர்வை

(பெரும்பாண் 25, 68)

என்பவற்றைக் காட்டாகக் கொள்க. ‘பரிசில் பெறுமுன் ஈரும் பேனும் உறையும் அழுக்கு நிறைந்த, தையல் பல பொருந்திய கந்தல் துணியுடுத்தி இருந்த இழிநிலையையும், பரிசில் பெற்றபின் பொலிந்து விளங்கும் ஏற்றமும் கண்டு நாங்களே வியக்குமளவில் வேறுபட்டு விளங்குகின்றோம்; அத்தகைய வறுமை நிலையில் வாடியவர்கள் நாங்கள்! பண்டை வறுமை நிலையை நினைக்கவே நெஞ்சம் குமுறுகின்றது! எனப் பாணரும் பொருநரும் எடுத்தியம்புவது காண்க.

எண்ணித் துணிந்த பின்னரே :

வல்லாங்கு வாழத் தெரியாமல்—அல்ல வாழ விரும்பாமையால் இக் கலைஞர்கள் வறுமையால் வாட்டமுறுவர். வறுமையால் இன்னலுற்றபோதுகூட வள்ளலை நாடிச் செல்லமாட்டார்கள். வறுமையின் எல்லையை அடைந்தபோதே வள்ளலை நாடுவர். வறுமைதீர எவரிடமும் எளிதில் சென்று இரக்கமாட்டார்கள். புரவலர் தம் திறமறிந்து தரும் தரமுடையரா? ஈத்துவக்கும் இன்பம் அறிந்தவரா? உள்ளி உள்ளி உவந்து ஈயும் இனியரா? எனக் கண்டறிந்த பின்பே தம்மைப் போன்றே கலையுணர்வும் தமிழ்ப் பற்றும் மிக்க தக்கோர் எனக்கண்டு தெளிந்த பின்னரே அன்னாரைத் தேடிச் செல்வர். [எனவேதான் பெற்றிவாய்ந்தோர் ஆற்றுப்படுத்தும் இன்றியமையாமை ஏற்பட்டது—அதனால்தான் ஆற்றுப்படைச் சிற்றிலக்கியங்கள் அரும்பின]. தேடிச் சென்ற ஞான்றும் கை நீட்டிக் கேட்பதோ, வாய்திறந்து இரப்பதோ இல்லையாம். (ஈயென இரத்தல் இழிந்த

தன்ருே) எனவேதான் குறிப்பறிந்து – கலைச் சிறப்புணர்ந்து கேளாமலே அள்ளித் தரும் வள்ளலையே நாடிச் சென்றனர். இஃது ஆற்றுப்படையினூடே அறியக்கிடக்கும் இரவலர்மாட்டு அமைந்த இனிய பண்பு என்னலாம். கரப்பிலா நெஞ்சுடைக் கடனறிவாரை நாடும் கலையுள்ளம்தான் என்னே !

புரவலர் புகழ்பாடல் :

அடுத்து, அள்ளித் தந்து அவலநிலை போக்கும் வள்ளலின்– தலைவனின் புகழ் பாடக் காண்கிருேம். பிறர் பிறர் சீரெல்லாம் தூற்றிச் சிறுமைப் புறங்காத்து, யார் யார்க்கும் தாழ்ச்சி சொல்லும் தன்மை இரவலர் மாட்டு இருப்பதனுலேயே தக்கோர் புகழ் பாடப் பெறுகிறது எனலாம். புகழ்ந்து பாடுவர் என்றதும் பயன்கருதி— பொருள் கருதி எல்லோரையும் புகழ்வர் என்று எண்ணவேண்டா; தகுதியுடைத் தக்கோரையே அவர் நா புகழும். இழிவுகண்டுழி இடித்துரைக்கும்; ஏற்றம் கண்டுழி ஏற்றிப் போற்றும். இஃது இரவலர் தன்மை.

இவண் தமிழ்ப் பெரு மூதாட்டி அவ்வையார் கயவர் சிலருக்கு அறிவு கொளுத்திய வரலாறு அறிந்து இன்புறத்தக்கது. ஒருசமயம் தம்மைப் பாடிப் பரவுமாறு கயவர் சிலர் வேண்ட, அதற்கு அவ்வை, ‘மூவேந்தரையும் பண்பாளரையும் பாடிய நாவால் புல்லரைப் பாட ஒல்லுமோ ? உங்களைப் பாடுமாறு உங்கள்பால் எத்தகைய சிறப்பு இருக்கிறது? களிறுகள் மாயும் களம்பல கண்டதுண்டா? கேள்வியால் தோட்கப்பட்ட செவியோ உங்கள் செவி ? வேட்கை தீரத் தண்ணீர் கூடக் கொடுக்கமாட்டீர்களே ! உங்களை யாங்ஙனம் பாடுவேன் ! என இடித்துரைத்தார்; எள்ளி நகையாடினுர். இதோ அவ்வினிய பாடல்;

மூவர் கோவையும் மூவிளங் கோவையும்
பாடிய எம்தம் பனுவல் வாயால்
எம்மையும் பாடுக என்றனிர், நும்மை
எங்ஙனம் பாடுதும் யாஅம்;
களிறுபடு செங்களம் கண்ணிற் காணீர் !
வெளிறிலா நல்யாழ் விரும்பிக் கேளீர் !
புலவர் வாய்ச்சொல் போற்றீர் ! மற்றும்
உடீஇர் ! உண்ணீர்! கொடீஇர்! கொள்ளீர் !
ஓவாக் கானத் துயர்மர மதனில்
தூவாக் கனியில் தோன்றினீரே !

உள்ளம் குளிர்ந்தபோதெல்லாம் உவந்துவந்து பாடும் புரவலர்கள், ‘சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிரும்மே’ எனத் தாயுமானுர் பாடியமை போன்றே, செந்தமிழ்ப் புரவலர் தம் உள்ளம் குளிர உறுபொருள் கொடுத்தபோது உவந்து பாடுவர். இங்ஙனம் பாவலரால் தாம் பாடப்பெறுதலைப் புகழாகவும்,

பாடப்பெருதொழிதலே இகழாகவும், கருதினர் காவலரும் (புலவர் பாடாது வரைக என் நெடுவரை--புறம்). இக்கருத்தும் ஆற்றுப்படை அனைத்திலும் அமைந்தொளிர்கின்றது.

முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை யேற்ப
'அறுவர் பயந்த ஆறமர் செல்வ!
ஆல்கெழு கடவுள் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி!
வானோர் வணங்குவில் தானைத் தலைவ!
மாலை மார்ப! 'நூலறி புலவ'!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொன்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் 'குறிஞ்சிக் கிழவ!'
'பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே!'
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக!
நசையுநர்க் கார்த்தும் இசைபே ராள!
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்!
மண்டமர் கடந்தநின் வென்றாடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்!
பெரியோ ரேத்தும் பெரும்பெயர் இயவுள்!
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந! குரிசில் எனப்பல
யானறி யளவையின் ஏத்தி (திருமுருகு 251—77)

என முருகாற்றுப் படையில் பாட்டுடைத் தலைவன் பாராட்டப் பெறுவது காண்க.

பாராட்டும் திறம் :

குறிஞ்சிக் குமரனைக் கண்டஞான்று கைகூப்பி, தலை திருவடிகளிற் தோயுமாறு வணங்கி, 'இமயமலை உச்சியில் தருப்பை வளர்ந்த சுனையில் அங்கியங் கடவுள் தன் உள்ளங்கையில் ஏந்த, அருந்ததி நீங்கிய கார்த்திகை மாதர் அறுவரால் வளர்க்கப்பெற்ற ஆறுவடிவுடைய செல்வனே! கல்லாலின் கீழிருந்த கடவுளின் புதல்வனே! பார்வதி பெற்ற பெருமகனே! பகைவர்க்குக் கூற்றுவன் போல்வாய்! கொற்றவையின் குழவியே! தேவர் படைக்குத் தலைவ! நூல்பல கற்ற புலவ! போரில் வல்லவ! அந்தணர் செல்வமே! சான்றோரால் புகழப்படுபவனே! தெய்வயானைக்கும் வள்ளியம்மைக்கும் கணவனே!

குறிஞ்சி நிலத்திற்கு உரியவனே! முருகனே! போர்முடித்துப் பொலியும் மார்பனே! இல்லையென வந்தார்க்கு அள்ளித் தரும் வள்ளால்! பெரியோர் போற்றும் பெரிய பெயரையுடையாய்! சூரபன்மாவின் குலத்தை அழித்து மதவலி எனும் பெயர் பெற்றோனே! ஒப்பற்றவனே! எனப் பாடிப் பரவுமாறு, அருள் பெற்ற புலவன் பெறநிற்கும் புலவனுக்குக் கூறுவதாக நக்கீரர் நவிலும் திறம் நயமுடைத்து. இவ்வடிகளில் முருகனுடைய பெருமை பல பேசப்படுவது காண்க.

முடத்தாமக் கண்ணியாரும் தம் பாட்டுடைத் தலைவனாகிய கரிகால் வளவனது சிறப்பைப் பின்வருமாறு எடுத்தோதுகிறார்:

உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்
முருகற் சீற்றத்து உருகெழு குருசில்
(பொருநர் 130—31)

இளமையிலேயே இயமன் போல் வன்மை பெற்று விளங்கியவன். பால் மணம் மாறுதபோதே முதல் இரை வேட்டைக்குச் சென்ற சிங்கக்குருளை. வெண்ணிப்பறந்தலையில் சேரனையும் பாண்டியனையும் வென்றவன்.

இருபெரு வேந்தரும் ஒருகளத்து அவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்
(பொருநர் 46—48)

மாறுபட்ட இருவர் முறைவேண்டி வந்தபோது, இருவரும் இவனது இளமை கண்டு தயங்கி நிற்க, குறிப்பறிந்து நரை முடித்து உரை முடிபு கண்ட பேரறிவாளன் எனவும் புகழப்படுகின்றான்.

.... முதியோர்
அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்
(பொரு 186—87)

இது போன்றே நல்லியக்கோடனையும், நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவர் புகழ்கின்றார் பாருங்கள்:

எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் றாங்கிய வுரனுடை நோன்றாள்
பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவின் அந்தணர்க் காயினும்
கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன
அடையா வாயிலன் (சிறுபாண் 113—15, 203—6)

கடையெழு வள்ளல்கள் ஆற்றிவந்த கொடையை அவர்கட்குப் பின்னர் அக்கொடைத் திறத்தை தான் ஒருவனாகத் தாங்கி நிற்கும் நல்லியக்கோடன் இல்லோர் சொன்மலை. பன்மீன் நடுவண் பான் மதிபோல இன்னகை ஆயமோடு இனிது வீற்றிருக்கும் அவன்,

வரிசையறிந்து நல்குதலும், வரிசையறியாதே ஏனையோர்க்கெல்லாம் எடுத்தளித்தலும் செய்யும் இனியன் ; எண்ணியது முடிக்கும் திண்ணியன்; அடையாத கதவினன்; எனவே ஏனையோரிடத்து நின்று நிலவாத புகழ் இவன் மாட்டு நின்று நிலைபெறுகின்றதாம்.

இங்ஙனமே திரைகடல் நடுவே சூரியன் திகழ்ந்து ஒளிவீசுதல் போன்று தெளிந்த மதியோடு, வறியராய் வந்தோர்க்கும் வறுமையுற்று இரந்தோர்க்கும் விரும்பியவற்றை வழங்கி—வழங்குகின்றமையால் உளம் சலியாது உற்றார் உறவினருடன் கூடிமகிழ்ந்து கொலு வீற்றிருக்கும் இளந்திரையன் இயல்பையும் ஏற்றத்தையும் :

குணகுடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு
முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி
இடைத்தெரிந் துணரும் இருள்தீர் காட்சிக்
கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்து
உரும்பல் சுற்றமோ டிருந்தோன் …………
……………………தொண்டையோர் மருக!
மள்ளர் மள்ள! மறவர் மறவ!
செல்வர் செல்வ! செருமேம் படுந!
வந்தேன் பெரும' வாழிய நெடிதே!

(பெரும்பாண் 441—47, 54—56)

எனக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிச் செல்கின்றார். நன்னன் சேய் நன்னனையும் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் 536–544 அடிகளால் கூத்தராற்றுப்படையில் பாடிப் பரவுகிறார்.

கால்நூற் றாண்டாய்க் கல்வித் தொண்டே
கடவுள் தொண்டாய்க் கருத்துடன் ஆற்றி
ஒழுக்கம் புலமை உயர்நலப் பண்பு
மீக்கோர் தம்மை வெளிவரச் செய்துளர்,
மாணவர் எவரும் வருந்திடக் காணின்
பால்நினைந் தூட்டும் தாயினும் பரிந்து
'பிறர்அறி யாத பெற்றியில்' உதவுவர்
தமக்குள ஊணும் தந்தநாள் பலவே
ஈட்டும் பொருளெலாம் ஈந்து மகிழ்பவர்,
ஏடும் இதழும் இனிய நூல்களும்
பற்பல பெற்றே பரிவுடன் அளிப்பர்;
வீட்டின் திண்ணை விரும்புவோர் பள்ளியாம்
நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு என்ற
வள்ளுவர் வாய்மொழி வடிவம் அவரே!

(மாணவர் 95—109)

என அண்ணல் சுப்பிரமணியனாரின் அரிய பண்பையும் பெற்றியையும் எடுத்தோதுகின்றார் இலக்குவனார். இதனால் ஆற்றுப்படை அனைத்திலும் பாட்டுடைத் தலைவனைப் பாடி மகிழும் பான்மை அறிதற்பாலது.

பீடும் பெருமையும் :

பெருக்கத்து வேண்டும் பணிவும் சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வும் இவ் இரவலர் மாட்டு இயல்பாகவே அமைந்திருப்பது அறிந்து இன்புறத் தக்கது. வறுமை மிகுந்த காட்சிக்கு இடையே விளங்கும் பெருமித மாட்சியும்,

> பெருவறம் கூர்ந்த கானம் கல்லெனக்
> கருவிவானம் துளி சொரிந் தாங்கு
>
> (பொருநர் 23—24)

செல்வம் பெருகிய காலத்தில் எல்லோர்க்கும் ஈந்து, வல்லாங்கு வாழ்தும் என்னுது வாரி வழங்கி இன்புறு காட்சியும் கேட்டார்ப் பிணிக்கும் தகையன; கேளாரும் வேட்ப மொழியும் திறத்தன. வறுமையிற் செம்மையும், வளமையில் சீர்மையும் மிக்க கலைஞர் வாழ்வைக் காணக் காண அவர்கள் நமக்குப் பேரன்பும் பெருமதிப்பும் மிகுகின்றது இல்லையா ?

மாட்சியும் மானவுணர்வும் :

வீழ்ந்த காலத்தும் வாழ்ந்த காலத்தும் சீராக வாழ்ந்து சிறக்கும் கலைஞர் மாட்சியே மாட்சி! நாளை வாழ்வைப் பற்றி நினையாது, எலியென வாழாது புலியென வாழ்ந்து கவலையற்ற வாழ்வை மேற்கொள்ளும் கலைஞர் வாழ்வே வையத்துள் வாழ்வாங்கு வாழும் பெரு வாழ்வாகும். மாண்புடைப் பெருவாழ்வு வாழும் இவ்விரவலர்பால் அமைந்த மானம் காக்கும் திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற் பாலது.

ஒரு பாண் குடும்பம். செல்லரித்த சுவர்கள், உளுத்துப்போன தூண்கள்; ஆக்கையற்று விழுகின்ற அட்டில்; சமைத்துப் பன்னாள் ஆயினமையின் சமையலறையில் புழுதி, புழுதியில் பூத்த காளான்கள் அங்கே ஒரு நாய்! குட்டி ஈன்ற நாய்!! தனக்கும் உணவின்றித் தன் குட்டிகளுக்கும் பாலின்றி வருந்திக் கிடந்தது. எச்சிற் சோறுண்டு இன்புறவல்ல நாய்க்கே இந்நிலையெனில் வறுமையின் கொடுமையை என்னென்று உரைப்பது ?

விழியாத கண்ணையுடைமையின் வெளியே சென்று உணவு தேடவும் இயலாத குட்டிகள். பசி — என் செய்யும்? தாய் நாயை அணுகி அதன் மடியில் வாய் வைத்து உறிஞ்சின. இல்லி தூர்ந்த பொல்லா முலையாயிற்றே! பால் சிறிதும் இல்லாமையால் குரைத்தது. குட்டிகளுக்குப் பால் கொடுத்து மகிழும் மாண்புடை நாய் — மாற்றார் தன் குட்டிகளை அணுகிய காலை குரைக்கும் இயல்புடை நாய் இதுபோது அவற்றின் உறுஞ்சுதலைப் பொறுக்கமாட்டாது குரைத்தது! என்னே வறுமை விளைதரு மாற்றம்! (தொடரும்)

2 - JAN 1960